
RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
- SEINE - FRANCE

# கடல்

அலை 08 Nov 1991
சமுதாய சஞ்சிகை



# கடல்

கடல் ஆக்கதாரர்களின் கருத்துகளுக்கு
பூரண சுதந்திரம் அளிக்கிறது. கருத்து
மோதல்களுக்கு கடல் களமாக விரும்புகிறது.

ஆசிரியர் குழு:

சுழியோடிகள்

**பேசாதீர்கள் செயல்படுங்கள்;**

**அறிவிக்காதீர்கள் செய்து காட்டுங்கள்**

**சிறுவர்கள் எழுதும் ஆக்கங்களும், சிறுவர்களுக்காக பெரியவர்கள் எழுதும் ஆக்கங்களையும் அலங்கரிக்க 'மழலைப்பட்டாளம்' என்ற பகுதி காத்திருக்கின்றது.**

**எழுதுங்கள் வரவேற்கின்றோம்**

**ஆசிரியர் குழு**

'கடல்' இலவசமாக வெளிவரவும் இந்த லங்கன்பீல்ட் நகர தமிழ் மக்களுக்கு பல வருடமாக தன்னாலான காசீர உதவிகளை செய்து வரும் 'நோசி' [FRAU. KIRBERG] அவர்களுக்கும், PASTOR HORST-WALTER LAND அவர்களுக்கும் இலங்களின் அறிமுகத்துக்குப் பின்னணியிலுள்ள திரு. R. சுந்தரேஸ்வரன் அவர்களுக்கும் எமது நன்றிகள் உரித்தாகுக.

Kadal
சுழியோடிகள்

# மழலைப் பட்டாளம்

## -சிறுவர் பகுதி-

## முத்துக்குளித்தல் இலக்கம் 4

1) இலங்கையின் மிகநீளமான நதிகள் இரண்டின் பெயரைக் குறிப்பிடுங்கள்.

2) ஜேர்மனியில் தமிழர் அகதிகளாக வந்திருப்பது போல வேறு எந்தெந்த ஐரோப்பிய நாடுகளில் தமிழர் அகதிகளாக வந்திருக்கின்றனர்?

3) தமிழில் ஆய்த எழுத்து என்பது எதனைக் குறிக்கின்றது?

4) N L எழுத்துகள் எந்த நாட்டு வாகனங்களிற் காணப்படுகின்றன?

5) லான்ட் LANDE என்று முடியும் நாடுகளின் பெயர் மூன்று எழுதுக?

விடைகளை [illegible].11.91 ற்கு முன்னதாகக் கடல் சஞ்சிகையின் புதிய முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

## ...த்துக்குளித்தல் (இல 3) முடிவுகள்

1) ஐரோப்பாவில் கடற்கரையோரம் இல்லாத நாடுகள்

| நாடுகள் | தலைநகரங்கள் |
|---|---|
| சுவிற்சர்லாந்து SCHWEIZ | பேர்ண் |
| லுக்ஸம்பேர்க் LUXEMBURG | லுக்ஸம்பேர்க் |
| செக்கோஸ்லோவாக்கியா | பிராக் |

2) ஆசியாவில் உள்ள சிலநாடுகளும் அவற்றின் தலைநகரங்களும்

| நாடுகள் | தலைநகரங்கள் |
|---|---|
| இந்தியா | புது டெல்லி |
| பங்ளாதேஷ் | டாக்கா |
| சிங்கப்பூர் | சிங்கப்பூர் |
| தாய்லாந்து | பாங்கொக் |
| பர்மா | ரங்கூன் |
| சீனா | பீக்கிங் |
| யப்பான் | டோக்கியோ |

3) இலங்கைக்கு ஆங்கிலேயர் வைத்த பெயர் சிலோன் CEYLON என்பதாகும்

4) வாகனங்களில் CH என்ற எழுத்துகள் சுவிஸ் நாட்டின் வாகனங்களில் காணப்படுகின்றது.

5) BUNDESBAHN என்பது புகையிரதசேவையைக் குறிக்கின்றது. தமிழர்களிற் பெரும்பாலானவர்கள் BUNDESSTRASSE வையே BUNDESBAHN என்று சொல்லிக் கொள்ளுகின்றார்கள்.

ஐரோப்பாவில் உள்ள சில நாடுகளும் அவற்றின் வாகனத்தில் பொறிக்கப்பட்டுள்ள எழுத்துகளும்:

ஜேர்மனி.................................D

நெதர்லாந்து...............................N L

பெல்ஜியம்.............................. B

லுக்ஸம்பேர்க்..........................L
பிரான்ஸ்..........................F
ஸ்பானியன்..........................E
சுவிற்ஸர்லாந்து..........................C H
இத்தாலி..........................I
ஒஸ்ரியா..........................A
லிச்ரென்ஸ்ரைன்..........................FN
டென்மார்க்..........................D K
நோர்வே..........................N
பிரித்தானியா/பிரிட்டிஸ்..........................G B

## பூனைக்குட்டிகளின் ஏமாற்றம்

---

ஒரு நாள் இரண்டு பூனைக்குட்டிகள் சண்டை செய்து கொண்டிருந்தன, அப்பொழுது அந்த வழியால் நாய் ஒன்று வந்தது. அது பூனைக்குட்டிகளைப் பார்த்து''ஏன் சண்டை செய்கின்றீர்கள்''என்று கேட்டது.

அதற்குப் பூனைக்குட்டிகள் எம்மில் யார் வீரர் என்று அறிவதற்காகச் சண்டை செய்கின்றோம் என்றன. வீரர் யார் என்று அறிந்துவிட்டால் அவருக்குப் பரிசு உண்டா? என்று நாய் கேட்டது. இந்தப் பந்து எங்கள் அம்மா தந்தது. இதுவே வீரருக்கு உரிய பரிசு என்று பூனைக்குட்டிகள் சொல்லின.

இதற்காக நீங்கள் சண்டை செய்ய வேண்டியதில்லை. அதோ தெரிகின்ற மரம் வரை ஓடித்திரும்புங்கள். யார் முதலில் வருகின்றீர்களோ அவரே வீரர் என்று பந்தை எடுத்துக் கொள்ளலாம் என்று நாய் சொன்னது.

நாயின் பேச்சை நம்பிய பூனைக்குட்டிகள் மரத்தை நோக்கி ஓடத்தொடங்கின.நாய் பந்தைக் கவ்விக் கொண்டு அடுத்த பக்கமாக ஓடி மறைந்தது.

அனுப்பியவர்:செல்வன் லிங்காதரன் கமலநாதன்
5650 SOLINGEN-1

## மௌனம் வென்றது

அயலில் உள்ள ஊருக்கு ஒருவன் தனது குதிரையில் சென்று கொண்டிருந்தான்.வழியில் ஆட்கள் தங்கி ஓய்வெடுத்துக் கொள்ளும் மடத்தைக் கண்டான். தானும் சிறிது நேரம் தங்கி ஓய்வெடுத்துக் கொண்டு செல்லலாம் என்று விரும்பினான்.குதிரையை விட்டுக் கீழே இறங்கிக் குதிரையை ஒரு பக்கமாகக் கட்டிவிட்டுத் தானும் படுத்துக் கொண்டான்.

அப்போது அந்த மடத்தில் தங்கியிருந்த குறும்புக் காரன் ஒருவன் குதிரையுன் சேட்டை செய்யத் தொடங்கினான்.இதனைக் கவனித்த குதிரைக் காரன் ''தம்பீ குதிரையுன் சேட்டை செய்யாதே அது களைத்துப் போய் நிற்கின்றது.அதற்குக் கோபம் வந்தால் உதைத்து விடும்.உன் பற்கள் எல்லாம் போய்விடும் என்று சொன்னான்.

குறும்புக்காரன் இவற்றை ஒன்றும் கேளாமல் குதிரையுன் சேட்டை செய்து கொண்டிருந்தான். குதிரையும் நீண்டநேரமாகப் பொறுத்திருந்து பார்த்தது. குறும்புக் காரன் தனது சேட்டையை நிறுத்துவதாக இல்லை. குதிரை தனது பின்னங்காலினால் ஒரு உதைவிட்டது. குறும்புக் காரன் சுழன்று கரணம் போட்டு விழுந்தான். வாயிலிருந்து இரத்தம் வந்தது.பற்களும் உடைந்துவிட்டன.

ஐயோ! இந்த அநியாயத்தைக் கேட்பாரில்லையா? எனது இந்த நிலைக்கு இந்த முரட்டுக் குதிரையின் சொந்தக்காரனே காரணம்.எனக்கு இவனிடமிருந்து பற்களுக்கான நட்டத்தை வாங்கித் தாருங்கள் என்று கத்தி ஆட்களைக் கூப்பிட்டான்.

ஆட்கள் பலர் கூடினார்கள்.நீதிமன்றத்திற்கு இருவரையும் அழைத்துச் சென்றார்கள்.அங்கு நீதிபதி குதிரைக்காரனைப் பார்த்து இது உன்னுடைய குதிரையா என்று கேட்டார்.அவன் எதுவும் சொல்லவில்லை. உன்னுடைய குதிரையால் இவனுக்குப் பற்கள் இல்லாமற் போய்விட்டன.இதற்கு என்ன சொல்லுகின்றாய்? என்று நீதிபதி கேட்டார்.குதிரைக்காரன் எதுவும் பேசாமல் நின்றான்.

அப்போது குதிரையிடம் உதை வாங்கியவன் ''என்ன ஊமை போல நடிக்கின்றாய்? குதிரையுடன் சேட்டை விட வேண்டாம் என்றும் குதிரை உதைத்தால் பற்கள் இல்லாமல் போய்விடும்''என்றும் நீ என்னிடம் கதைக்கவில்லையா? இப்ப என்ன ஊமை வேசம் போடுகின்றாய் என்று கேட்டான்.

நீதிபதிக்கு என்ன நடந்தது என்று விளங்கிவிட்டது. குதிரைக்காரன் நீதிபியைப் பார்த்து''ஐயா உங்களுக்கு உண்மை தெரிய வேண்டும் என்றே நான் ஊமை போல நடித்தேன்'' என்றான்.குதிரைக்காரனின் புத்திசாலித்தனத்தைப் பாராட்டிய நீதிபதி குதிரையிடம் உதை வாங்கியவனை எச்சரித்து அனுப்பினார்.

முத்துக்குளித்தல்

சரியான விடைகளை எழுதியவர்கள் விபரம்—>

(1) செல்வி. ஏ. சுதா, 4018 லங்கென்பீல்ட்.

(2) செல்வன். நிரோசன் சிறீகாந்தன், 2800 பிறீமன் 21.

ஒரேயொரு பிழை விட்டவர்கள்......

(1) செல்வன். சி. சிவாஸ்கர், 4100 டியுஸ்பேர்க் 28.
(2) செல்வன். லிங்காதரன் கமலநாதன், 5650 சோலிங்கன் 1.
(3) செல்வி. சி. சிவதர்சினி, 4100 டியுஸ்பேர்க் 28.
(4) செல்வி. தர்சினி கமலநாதன், 5650 சோலிங்கன் 1.

பரிசுக்குரிய அதிர்ஷ்டசாலி..........
செல்வன். நிரோசன் சிறீகாந்தன்
இவருக்கு எமது பாராட்டுக்கள்.

---

# ஈச்சமோட்டை ஈழவாணன்

'ஆனந்தி சாந்தி'

ஈழவாணனும் அவனுடைய நண்பர்கள் நான்கு பேரும் பாடசாலைக்குப் போய்க்கொண்டிருந்தார்கள். கால் நடையாக அதுவும் வேகாத வெயில் என்பதால் சரியான தாகம் எடுத்தது.

உடனே ஈழவாணன் சொன்னார், "டேய் ராஜு, இந்த தோப்புக்குள்ளே போய் இளநீர் குடிப்போம்" என்று. உடனே அனைவரும் தோப்புக்குள் புகுந்து கொண்டனர். போதியளவு இளநீரைப் பிடுங்கி தாகம் தீரும்வரை குடித்தனர்.

ராஜு கேட்டான், "ஈழவாணனே, இந்தக் கோம்பைகளை என்ன செய்வது?" என்று."

"அதை பக்கத்து வீட்டில் போட்டு விடுவோம்".

இப்படியே தினந்தோறும் தாகத்திற்கு இளநீர் குடிப்பதும், குடித்துவிட்டு பக்கத்து வீட்டில் தேங்காய் மட்டைகளைப் போடுவதுமாகக் காலத்தைக் கழித்தனர்.

இப்படியே ஒருநாள் ...

தோப்புச் சொந்தக்காரனிடம் மாட்டிக் கொண்டனர். அவன் வருவதைக் [...]தும் தேங்காய் மட்டைகளைப் போட்டு (பக்கத்து வீட்டில்) ஓடிவிட்டனர்.

தோப்புக்காரனுக்கு ஏற்கெனவே [...]வாணனைத் தெரியும். அவன் நேரே [...]தாயிடம் சென்று முறையிட்டான்.

மகனின் முறைப்பாட்டைத் தவறா[...] வாங்கிக்கொண்ட தாய் ஈழவாணனிடம் முறையிட்டாள்.

"எனேய் உன்ரை மேனை கண்டிச்சு வையனை; இனிமேல்பட்டு கோம்பைய பக்கத்து வீட்டுக்கை போட வேண்டாமெண்டு சொல்லி வையனை."

இளநீரை வழமைபோலக் குடித்து கொண்டிருக்கும்போது ஏதோ சத்தம் கேட்கவே திரும்பிப் பார்த்தான் ஈ[...]வாணன். அங்கே தோப்புக்காரனின் தா[...]

"தம்பி, தேங்காய் மட்டையை ம[...] வேண்டாம்" என்றாள்.

ஈச்சமோட்டை ஈழவாணனுக்கு ஒ[...] குஉஷியாக இருந்தது.

[illegible]

# அதிமேதாவியின் அவசரக்குறிப்புகள்

— (இ)ராமசாமி —

HOYERSWERDA எனும் கிழக்கு ...ர்மன் நகரத்தில் பிள்ளையார் சுழி ...டப்பட்டுவிட்டது. சும்மா அல்ல.... ...று ஆபிரிக்கச் சகோதரர்களை உயி...டு கருக்கியதின் ஊடாக.

...நாங்கள் இந்த மண்ணிற்குப் புதியவர்க... அல்ல. வெளிநாட்டவர்க்கெதிரான வன்...றைகள் கிட்லரின் கல்லறையோடு புதை... போனவையும் அல்ல. இங்கே ஜேர்ம...ர்கள்தான் வாழலாம்; மற்றவர்கள் எ...ாம் வெளியேறவேண்டுமென்ற கோசங்...ம் கூட, இவர்களைப் பொறுத்தளவில்... பல்லவியும் அல்ல.

ஆனால், ஏற்றுக்கொண்டார்கள்... ஆசி...ா, ஆபிரிக்கனை, கிழக்கைரோப்பியனை ....எல்லோரையும். நாங்கள் அப்படி நினைத்துக் கொண்டோம், சிறீலங்கா எப்படிச் சிதைந்தாலும் பரவாயில்லை, இங்கேயே தொடர்ந்து வாழலாமென்று. அதனால்தான் இயக்கக் கிளைகளை ஆரம்பித்தோம். ஏதோ எங்களுடைய பங்களிப்பு என உண்மை பேசும் குழல் பரிகசிக்க நடந்தோம்.

எவருக்குமே நாட்டுநிலைமையைப்பற்றிய ஆக்கபூர்வமான ஈடுபாடு இருக்கவில்லை. அப்படியான ஈடுபாட்டுடன் உழைப்பவர்களைக்கூட; வெறுமனே அமர்ந்திருந்து குறை கூறுவதையே பொழுது போக்காக்கிக் கொண்டோம். நாங்கள், அரசியல் அகதிகள், என்றோ ஒருநாள் எமது சொந்த மண்ணிற்கு திரும்பியே ஆகவேண்டும் என்ற நினைப்பு ஆரம்பத்திலேயே இருந்திருக்குமானால், பிரயோசனமான எவ்வளவோ விடயங்களை இதுவரையில் செய்திருக்கலாம். உரிய பொழுதுகளை இழந்துவிட்டு இன்று குழப்பத்தில் தோய்ந்திருக்கிறோம்.

புதிய நாஜிகள் பலப்புள்ள பக்க பலத்துடன் இயங்குபவர்கள். அரசின் ஆதரவுகூட அவர்களுக்கு இருக்கிறது. பொலிஸ் துறையின் அலட்சியமும், பத்திரிகைகள் கக்குகின்ற வெளிநாட்டவருக்கெதிரான ஆவேசமும், விரட்டுவதற்குரிய யுக்திகள்தான். சிறீலங்கன் இருக்கலாமென சட்டம் கூட இருக்கத்தான் செய்கிறது. ஆனால், சாபுறுக்கவில் கால் இழந்துபோன தமிழ்ச் சகோதரனை இந்தச் சட்டங்கள் காப்பாற்றியதா, என்ன?

மூன்றாம் உலக நாடுகளில் மனிதர்கள் கொலை செய்யப்பட்டால் மனித நேயம் செத்துவிட்டதென்றும், ஜனநாயகம் தழைத்தோங்க வேண்டுமென்றும் கோரிக்கை விடுகின்ற இந்த நாட்டு அரசியல்வாதிகள், புதிய நாஜிகளின் பாசிச வெறித்தனத்தைக் கண்டுகொள்ளாமல் இருப்பது, இந்த நாட்டிலே வாழ்கின்ற அனைத்து வெளிநாட்டவ

ருக்கும் ஓர் ஆபத்தான சமிக்ஞையே.வா
ர நதோறும் அகதிகளுக்கு சார்பாக ஆர்
ப்பாட்ட ஊர்வலங்கள் நடக்கத்தான் செ
ய்கின்றன.ஆனால் எரிப்புகளும்,தாக்குதல்
களும் தொடர்ந்தவண்ணமே இருக்கின்றன.
நாளொன்றுக்கு சராசரி நாலு சம்பவங்
களாவது நிகழ்கிறது.

இப்போதெல்லாம் ரீ.வி.,வானொலி
பத்திரிகைகள் இவற்றையொன்றும் பெரிது
படுத்தி பிரசுரிப்பதில்லை.ஏனெனில்,இப்
போது இது ஒரு சர்வ சாதாரண விடய
ம்;வெளியிலே திரியும்போது யாரைக் க
ண்டு பயப்படுவது என்றே புரிவதில்லை.மு
ன்பெல்லாம் மொட்டை வழித்தவர்கள்தா
ன் நாஸிகள் என்ற அபிப்பிராயம்.ஆனால்
இன்றைய ஜேர்மனியில் அப்படியல்ல.

நாஸிகளின் வளர்ச்சி ஓர் வளர்பிறை
யாக........,அது தேய்பிறையாக
வேண்டுமானால் இந்த நாட்டில் இருக்கக்
கூடிய வெளிநாட்டவர்கள் அனைவரையும்
வெளியேற்ற வேண்டும்....அதற்கு சட்ட
மியற்ற ஆதரவு தாருங்களென எதிர்க்கட்
சிகளைக் கேட்கிறார் உள்நாட்டமைச்சர்
அப்படி நீங்கள் ஆதரவு தர மறுத்தால்
நாஸிகள் வெளிநாட்டவர்களைத் தாக்கு
வார்கள் என்பதுதான் இதன் எதிர்மறை.

அதாவது இவர்களின் நோக்கம்,சட்ட
மியற்றி அதன்மூலம் வெளியேற்றுவது;அப்ப
டி சட்டமியற்ற சூழ்நிலைகள் இடங்கொ
டாதவிடின் புதிய நாஸிகளை வளர்ப்பது;
அவர்களை வெளிநாட்டவர்களுக்கு எதிரா
ன தாக்குதல்களில் ஈடுபடுத்துவது;இதன்மூ
லம் இந்த நாட்டில் உயிர்ப்பாதுகாப்புட
ன் வாழமுடியாது என்ற கட்டத்துக்கு வந்
து வெளிநாட்டவர்கள் தாங்களாகவே
வெளியேறுவது.

ஏனைய நாட்டவர்கள் பலர் இனிமேலு
ம் இங்கே வாழ முடியாது என்றொரு நி
லை ஏற்படுமானால்,தமது சொந்த நா
டுகளுக்குத் திரும்பலாம்.ஏனெனில் எமது
நாட்டைப்போல அப்படியொரு உயிரைக்
குடிகின்ற பயங்கரமான சூழல் அந்தப்
க்கங்களில் இல்லை.ஆனால் எமது நிலை
........மிகவும் கவலைக்கிடமான
ஏனெனில் இந்த நாஸிகளை விடவும் ப
கரமானவை ஈழ இயக்கங்கள்.

● ● ● ● ● ●

காணாமல் போனவர்களையும்,இன
தெரியாத ஆயிதபாணிகளால் கடத்தப்
டவர்களையும் பற்றிய தகவல்கள் நா
கு நாள் வந்த வண்ணமேயுள்ளன.தெற்
இத்தகைய சம்பவங்கள் இடம்பெறுகிற
போது,ஏதாவதொரு வழியில் தகவல்
சர்வ தேச மனித உரிமை நிறுவனங்க
கு செல்கின்றன.வடக்கில் (கிழக்கில்)
டம்பெறும் 'கைதுகள்' 'கடத்தல்'கள்
காணாமல் போதல் பற்றிய விபரங்க
முற்றுமுழுதாக வெளியே வருவதில்லை.
ன சோழர்களான விடுதலைப் புலிகளி
ஆட்சியில் மாதம் மும்மாரி பொழிகிற
தா இல்லையோ,குறைந்தது மாதம்
று பேராவது காணாமல் போய்விடுகி
ர்கள்.

அண்மையில்,புகழ்பெற்ற நாவலாசி
ரும்,தீப்பொறி எனும் அமைப்பின் நிறு
ர்களில் ஒருவருமான கேசவன்(கோவி
ன்) கொக்குவிலில் வைத்து விடுதலைப்
லிகளால் 'கைது' செய்யப்பட்டுள்ளா
இவருடைய கைதைத் தொடர்ந்து யா
பாணப் பல்கலைக்கழக மாணவர்கள்
ர் உட்பட மொத்தம் பத்துப் பேர்
களால் கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.
கேசவன் ஆரம்பத்தில் தமிழீழ மக்கள்
டுதலைக் கழகத்தில் (புளொட்) நிர்
கச் செயலாளராக இருந்தவர்.எனினு
உட்கட்சி அராஜகங்கள்,உட்கட்சிப் ப
கொலைகள் என்பவற்றால் முரண்பட்டு
வெளியேறியவர்.தன்னுடைய புதியதோர்
உலகம் எனும் நாவலில் தமிழீழ மக்கள
விடுதலைக் கழகத்தின் அராஜகங்களை
தெட்டத் தெளிவாகவும் பிரக்ஞை பூர்
மாகவும்,கலாதரிசனத்துடன் வெளிக்கெ
ணர்ந்தவர்.

வழமை போலவே, விடுதலைப் புலிக
ல் 'கொண்டு' செல்லப்படுபவர்களை
ற்றி எவ்வித தகவல்களையும் பெற மு
ாது. அவர்கள் உயிருடன் இருக்கிறார்க
ா இல்லையா என்பது பற்றிக்கூட ஒருவ
் கேட்க முடியாது. 'அரசியல் கைதிக
அனைவரையும் விடுதலை செய்' என்
ோ அல்லது அவர்களை அரசியல் கைதி
க்குரிய கௌரவத்துடன் நடத்துங்கள்
்றோ புலிகளை ஒருவரும் கேட்க முடி
ாது. இப்படிக் கேட்கக் கூடிய யாராவ
யாழ்ப்பாணத்தில் மிஞ்சி இருப்பார்க
ா என்பதும் சந்தேகம்.

"இது யுத்த சமயம், கட்டற்ற ஜனநா
கத்தை எதிர்பார்க்க முடியாது. செய்து
டி அல்லது செத்து மடி என்பதுதான் ம
திரம்" நியாயப்படுத்துகிற புத்தி ஜீவிக
ளுகளும் இல்லாமலில்லை. தமிழ் இயக்க
ளின் போராட்ட வரலாற்றில்—குறிப்
ாக தமிழீழ விடுதலைப் புலிகளின் இரத்
ம் செறிந்த வரலாற்றில் (இந்த இரத்
த்துள் அப்பாவித் தமிழ் மக்கள், அப்பா
ுஸ்லீம் மக்கள், அப்பாவிச் சிங்கள மக்க
், போராளிகள், புலிகள் அனைவரது இர
தமும் அடங்கும்) தூக்கலாகத் தெரிகி
ற ஒரு அம்சம் எதிர்க்கருத்துள்ள எவ
ரையும், எந்த நிறுவனத்தையும் அழித்தொ
ப்பது. இந்த அழித்தொழிப்பு ஒரு கருத்
யலாகவே விடுதலைப் புலிகளைப் பொ
த்தமட்டில் வளர்ந்துள்ளது.

தேவையேற்படுகிறபோது பொது எதி
ரியுடனிணைந்து கூட எதிர்க்கருத்துள்ள—தங்
களுடைய நிறுவன நலனுக்கு பாதகமான
ாகத் தாங்கள் கருதும் எவரையும், எத
னையும் எவ்விதமாகவும் அழிக்க அவர்கள்
தயங்கியதில்லை.

இருபதாம் நூற்றாண்டின் தேசிய விடு
தலை இயக்கங்களின் வரலாற்றிலிருந்தும்,
ஸான்டினிஸ்டாக்களின் போர் வரலாற்றிலி
ருந்தும், நாங்கள் எதாவது கற்றுக் கொ
ள்ள இருக்கிறதென்றால் அது—அரசியல் இ
யக்கங்களுக்கிடையேயும் உள்ளேயுமான ஜ
னநாயகமும், அரசியல் கருத்து நிலையில்
குறிப்பிட்ட ஒற்றுமையும்தான் நீதியோ
டு கூடிய வெற்றியைத் தரும் என்பதே.

உலகம் முழுவதிலும் போராட்ட இயக்
கங்கள் எண்ணற்றோரைக் கொன்று குவித்
துள்ளன. கொலை செய்யாமல் விடுதலை
பெற முடியாது என்பது போன்ற யந்திர
த்தனமான அரசியல், வரலாற்றுக் குருடர்
களுக்கே உகந்தது. கிழக்கு ஐரோப்பிய
அனுபவங்களுக்குப் பிறகும் போராட்டமும்
ஜனநாயகமும் பற்றிய காட்டுமிராண்டித்த
னமான பார்வையே விடுதலைப் புலிகளிட
ம் இருக்கும் என்றால் தமிழ் மக்களுக்கு
(முஸ்லீம் மக்களுக்கு அல்ல) ஒரு வேளை
தமிழ் ஈழம் கிடைக்கலாம். ஆனால் சுதந்
திரம் கிடையாது.

மனித விழுமியங்களுடன் கூடிய சுதந்திர
த்திற்கான போர் சமூக, அரசியல் தளங்
களில் எப்போதும் இருந்து கொண்டேயிரு
க்கப் போகிறது. இது தமிழர்களுக்கும்
பொருந்தும், சிங்களவர்களுக்கும் பொருந்
தும், முஸ்லீம்களுக்கும் பொருந்தும்.

நன்றி—சரிநிகர்..

● ● ● ● ● ●

சஞ்சிகை வெளியிடுவதென்பது மிகவும்
சர்வ சாதாரணமான விடயமல்ல. அதிலும்
சமகாலச் சூழலில் உண்மைகளை எழுதுவ
தென்பது வாழ்வோடு சம்பந்தப்பட்ட வி
டயம்.

ஜேர்மனியில் பல சஞ்சிகைகள் வெளிவ
ந்திருக்கின்றன. தொடர்ந்தும் வந்து கொ
ண்டிருக்கின்றன. சில சஞ்சிகைகளைப் பார்
க்கும்போது பேப்பரும், பேனையும், போ
ட்டோ கொப்பி மிசினும் கைவசம் இருப்
பதன் காரணமாக வெளிவருகின்றவை என்
பதுதான் தெரிகிறது. இங்கேயிருக்கக் கூடி
ய தமிழ்ச் சமூகமானது, சஞ்சிகைகள் வெ
ளியிட்டு எமக்கு சேவை செய்யுங்கள் என

க் கேட்டதாகத் தெரியவில்லை. ஆனால் சில சஞ்சிகைகள் சொல்கின்றன; சேவை செய்யப் போவதாக, செய்து கொண்டிருப்பதாக.

படப்பிடிப்பிலே இரண்டு நடிகைகள் உருண்டு, புரண்டு சண்டை போட்டார்களாம் அநேகமாக தென்னிந்திய தமிழ்ச் சஞ்சிகைகளிலே இப்படியாகவும் கிசுகிசுக்கள் இடம்பெறும். இரண்டு பக்கங்கள் புரட்டினால் ஓர் அருமையான கதை, அடுத்த பக்கத்து மூலையில் ஒரு 'பிரா' ஜோக், ..... தொடர்ந்தால் அரசியற் கட்டுரை, ....... அழகுக் குறிப்புகள் பற்றி ஒரு நடிகையின் அறிவுரை..... இது ஒரு பாணி சஞ்சிகைத்தனம். இப்படியான சஞ்சிகைகளை வெளியிடக்கூடாது என்றோ; பார்க்கக்கூடாது, படிக்கக்கூடாது என்றோ சொல்ல வரவில்லை. சொல்வதற்கு யாருக்கும் உரிமையுமில்லை. ஆனால், இப்படியான சஞ்சிகைகள் சமுகத்தின் நலனை முதன்மைப்படுத்துவதாக சொல்ல முனைந்தால் அது நகைப்புக்குரியதும் மறுக்கப்பட வேண்டியதுமாகும்.

தென்னிந்தியாவிலே, ஒரு நேர உணவிற்கே வக்கற்ற மக்களைப்பற்றி, அவர்களின் வாழ்வைச் சிதைத்தவர்களைப்பற்றி, அந்த வாழ்வின் மாற்றத்திற்கான வழிமுறைகள் பற்றி சொல்ல முடியுமாயின்; அதுதான் தரம்; அதுதான் சமகாலச் சூழலின் வாழ்வைத் தொலைத்தவர்களுக்கு முழுமையாக முக்கியத்துவம் கொடுக்கின்ற விதம். ஆனால், இப்படியான சஞ்சிகைகளின் நோக்கம் அதுவல்ல ...... வியாபாரம், அதனால் வருகின்ற லாபம் மட்டுமே.

ஆனால், கேடயம் மனஓசை போன்ற சஞ்சிகைகள் அப்படியானவையல்ல. அவை, சமுகத்தின் சமகாலப் பிரச்சனைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பவை. கொள்கை வழி நின்று இலக்கை நோக்கிய நகர்வுகளில் உழைப்பவை. அவை, சின்னத்தனமான விடயங்களை எழுதி, அந்த விடயங்கள் சமு

கத்துக்குள் விரும்பப்படும் என்ற போ
ல் விற்பனையைக் கூட்ட முனைவதில்லை
மேலும், தமிழில் எழுதத் தெரியும் என்ற
ஒரேயொரு தகுதியை மட்டும் வைத்துக்
கொண்டு, ஒரு தரமான சஞ்சிகையை வெ
ளியிட முடியாது என்பதும் அவர்களுக்குத்
தெரியும்.

இதே மாதிரித்தான், எமது சூழலுக்கு
வெளிவருகின்ற சஞ்சிகைகளையும் தரம்
ரித்துப் பார்க்க வேண்டிய அவசியம், வ
சகர்களாகிய ஒரு சாராருக்கு இருக்க
து. புலி சுடுகிறது, இராணுவம் சுடுகிறது
புளொட்டும் ரெலோவும் ஈபிடிபியும் ச
கின்றன. வாழ்வை இழந்த மக்கள் நடை
பிணங்களாக நடுவெளியில். இந்த நிலை
யின் மாற்றத்திற்கான இன்றைய தேவை
கருத்தாடலும், விவாதமுமே என்பதைத்
தெரியாது; இங்கே சிலர் போதை உ
ள் கிசு கிசு மூட்ட முனைகின்றனர். மு
லில் எம்மைப் புரிந்து கொள்வோம். அ
ருப் பின் சமுக சேவைக்குள் நுழைவோ
அதுவும் எப்படிச் சேவை செய்யலாம்
ன்பதைத் தெரிந்து கொண்டு; புலியை எ
ர்ப்பது, அரசை எதிர்ப்பது, அனைத்து
ராஜகங்களையும் எதிர்ப்பதென்பது ஒரு
நாகரீகமாகக் கருதப்படுமானால், அ
நாகரீகத்தைப் பின்பற்றுவதற்குரிய த
எதிர்ப்பவர்களுக்கு மட்டும்தான் இருக்க
து. எனெனில் எதிர்த்து எழுதுவது என்பது
குழந்தைப் பிள்ளைகள் மண் வீடு கட்டி
கும் பாரம்பரிய விளையாட்டல்ல. அ
உயிரோடு சம்பந்தப்பட்ட விடயம். ச
த்தின் நலனை முதன்மைப்படுத்தி, தமது
லன்களை துச்சமாகக் கருதுபவர்களால்
தான் அதைச் செய்ய இயலும். அப்படி
னவர்களால்தான் சமகாலச் சூழலில்
தரமான சஞ்சிகையை வெளியிடவும் இ
ம். மற்றவர்கள் எல்லாம் தங்களது
ந்த தேவைகளைப் பூர்த்தி செய்து
ள்வதற்காக, சஞ்சிகைகளை ஓர் ஊடக
கப் பயன்படுத்துகிறார்கள்........
... அவ்வளவுதான்......

கடந்த றிப்புகளில் சினிமா விமர்சன
இடம்பெறவில்லை. தொடர்ச்சியாக எ
கின்றபோது, முன்னர் பாவித்த பதங்க
திரும்பத் திரும்ப வருவது போன்ற
பிரமை. இதற்கு எனக்குள் இருக்கின்ற
பற்றாக் குறைகள்தான் காரணம். அ
டியொரு சிறப்பு விமர்சனத்தனம் என்
த்தே இல்லை என்பதும் எனக்குத் தெ
ும்.

இப்படி எல்லாம் தெரிந்து கொண்டும்
சகர்களாகிய எங்களையேன் போரடி
வேண்டும் என யாராவது கேட்க நி
க்கலாம். ஆனால், இந்த விமர்சனத்தை
வும் போரடிக்கின்ற சினிமாக்களை இ
ு மணித்தியாலங்களுக்கு மேல் அமைதி
த்திருந்து பார்க்கின்றபோது; அழுது, சி
து சம்பந்தமேயில்லாத பாவங்களை
ளிக்காட்ட முடியும்போது; இந்த விமர்
ம் ஒன்றும் விலக்கப்பட வேண்டிய அம்
ில்லை என நினைக்கின்றேன்'

எத்தனை சினிமாக்கள், ....... தென்
ந்தியாவிலேயே வாரத்துக்கு மூன்று, அல்
நாலு வெளிவருகின்றதென வீடியோ
ற் வாடகைக்கு விடுகின்ற தம்பியும் கூ
ார். எதைப் பார்ப்பது..... நாத்து
டாச்சா, அழகனா, மாநகரக் காவ
, பொண்டாட்டி பொண்டாட்டிதானா,
யமா, நீ பாதி நான் பாதியா....
...பெயர்களே பல தடவைகள் புரி
ில்லை. என்றாலும், எனது நண்பனொருவ
கூறினான்; இரண்டு மாதங்களுக்கு முன்பு
த 'நான் போகும் பாதை' என்ற
படம்; மிக அசாதாரணமானது; அதை
ர்த்துவிட்டு விமர்சி என்று.

அந்தப் பாதையில் இரண்டு மணித்தியா
களுக்கு மேல் போனதால், திரும்பி வ
உங்களையும் அழைக்கின்றேன். உங்களு
க்கு எவ்வளவோ அலுவல்கள் இருக்கும். அ
தனால் என்னுடன் வரமாட்டீர்கள் என்பது
ம் தெரியும். என்றாலும் உங்களுக்காக இ
ல்லாவிட்டாலும், கடமைக்காக திரும்பவும்
பயணம் போக வேண்டிய தவிர்க்க முடி
யாத சூழ்நிலை.

பணக்காரக் கல்லூரி மாணவி, ஒர் அ
னாதை அறிவுஜீவி மாணவனால் அவமானப்
படுத்தப்பட்டு விட்டதாகக் கருதி அவனை
பழிவாங்க முனைந்து, அவனது அபரிதமான
அறிவுக் களையில் சொக்கி அவனைக் கா
தலிக்கப்போய், அவனோ தான் போகும்
பாதையே வேறு என்று அவளை அம்போ
என்று விட்டுவிட்டு ஆகாயவிமானத்தில் பற
ந்துவிடுகின்றான்.

இதுதான் கதையின் கருத்.........
பாதைகள் எமக்கு ஒன்றும் புதியவை அல்
ல. ஆனால் இந்த 'நான் போகும் பா
தை' கொஞ்சமாகவேனும் புதுமை சொ
ல்கிறது. கல்லூரி வாழ்க்கை என்றால்
காதல் வரும்; அதனால் மோதல் வரும்;
நேரம் போகவில்லை என்றால் நையாண்
டிப் பாடல் வரும்; இடையிடையே சோக
ம் வரும்.......

கல்லூரி வாழ்க்கையை மையமாக
வைத்து எடுக்கப்பட்ட படங்களின் பாணிக
ள் இப்படியாகத்தான் இருந்தன. ஆனால்
இந்தப் படத்திலே வேறொரு கோணத்தி
ல் அணுகப்பட்டிருக்கிறது 'சமூகத்தில் முக்
கால் பங்கு மக்கள் வறுமையின் கோரப்
பிடிக்குள் மூச்சுத் திணறும்போது, காதலும்
கத்தரிக்காயும் அவர்களது அத்தியாவசிய
ப் பிரச்சினையாக இருக்கப் போவதில்
லை'. அதே நிலைமைதான் இந்தத் திரைப்
படத்தின் நாயகனிற்கும்.

தமிழ்த் திரை நாயகனென்றால் அவன்
அழகனாக இருக்க வேண்டும். படத்தைப்
பார்க்கின்ற ஒரு பாலார்கள் கனவுகளில்
சொக்க வேண்டும். (உண்மைதான்—அழகுக்

கு என்றும் ஓர் கவரும் தன்மை உண்டு;. ..........அது அழுகிப்போகாத மட்டும்.)

ஆனால் இந்தப் படத்தில் அதற்கான வாய்ப்புகளே இல்லை. இவ்வளவு சுமாரான கதாநாயகன் எந்தப் படத்திலும் தோன்றியதில்லை. ஆனால் ஏதோ ஒரு வேகம் அவரிடம் இருக்கிறது. சான்ஸ் கேட்கப்போன இடத்தில் தயாரிப்பாளர் வீட்டுச் செடிக்கு தண்ணீர் ஊற்றுவதும், தன் கவிதைக்குக் கிடைக்க இருந்த ஒரு லட்ச ரூபாய் பரிசு இருட்டிப்பு செய்யப்பட்டு வேறொரு பெயரில் வெளியாவதைத் தொடர்ந்து வெளிநாடு போய் ஓர் ஆராய்ச்சிக்காக தன் வாழ்க்கையை அர்ப்பணிப்பதும் கொஞ்சம் உருக்கமான காட்சிகள். தன் தமிழாலும் பேச்சாலும் ரொம்பவும் கவர்கிறார்.

பணக்காரி அவள் மேனியைப் பார்
அது பளபளக்கும் தகடு
நம் பாட்டாளி சிந்திய ரத்தங்கள் தா
அந்தப் பாவிமகள் உதடு
பாட்டாளி தன் மனையாளின் உடல்
வெறும் பாலைவன முகடு
அது பண்ணை அடிமைகளாயிருந்து
பட்ட பாடுகளின் சுவடு.

இக்கவிதை ஏளனம் செய்த பணக்கு மாணவியைப் பார்த்து நாயகன் உதிர் து. வசனங்கள் அனைத்தும் பளிச் பளிச் ளிகள். சிறு நகைச்சுவையும் உண்டு. பெ ணுடைமைப் பூங்காக்களுக்குள் மலர்வதா சொல்லப்படும் இப்படியான படங்களி சில பக்கங்களாவது பொக்கிசங்களா இருப்பது, பாராட்டப்பட வேண்டிய வி மே.

● ● ● ● ● ●

---

கடல் ஆசிரியர் குழுவினருக்கு

தங்களது ''இது எப்படி இருக்கு'' பகுதியில் ...... இலக்கியச் சந்திப்புச் செயற்குழுவிடம் ஏன் இலக்கியச் சந்திப்புவைக்கவில்லை என்று கேட்டதற்குச் செயற்குழுவிலிருந்து ''கருத்துத் தெரிவிக்காத உனக்கெல்லாம் இலக்கியச் சந்திப்பு ஒரு கேடா?? என்று பதில் வந்ததாக் கிசுகிசுக்கப் பட்டிருக்கின்றது. இதில் எந்தவிதமான உண்மையும் இல்லை என்றும் இது எம்மீது வீண்பிரச்சாரம் செய்பவர்களால் கற்பனையாக உருவகிக்கப் பட்டதென்றும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

சின்ன. இராஜேஸ்வரன்
12வது இலக்கியச் சந்திப்புக்கான செயற்குழுவின் சார்பில்

# இது எப்படி இருக்கு?

சீனா-மூனா

## பாவாடை,சட்டை ஜீன்ஸ் உடுத்திக் கொள்ளும் போது மூக்குக்கண்ணாடி தேவைப்படாத பல தமிழ்ப் பெண்களுக்குச் சாறி உடுத்தியதும் மூக்குக் கண்ணாடி தேவைப்படுகின்றது.சாறியை உடுத்திக் கொள்வதால் அது கண்பார்வையைப் பாதிக்கலாம் என்ற சந்தேகம் வந்தது. விசாரித்துப் பார்த்ததில் அப்படியொன்றும் இல்லையாம். மூக்குக்கண்ணாடி தற்காலப் பெண்களின் அழகுப் பொருட்களில் ஒன்று மட்டுமல்லவாம்.அந்தஸ்தையும் கூட்டிக் காட்டுகின்றதாம்.அப்பாடா! கண்ணாடியின் குறைபாடு தீர்ந்ததே!!

## ராட்டிங்கனில் கவியரங்கு நடைபெற்றது. புங்குடுதீவின் புரட்சிக்கவிஞர் பாடுவார் என்றார் அரங்கத்தலைவர். பாடவந்தவர் ''கர்ணனைக் களத்திலே கண்டாள் தாய்! அதைக் கவித்திறத்திலே சொன்னான் கம்பன்''என்றார் பரவாயில்லையே கவிஞரின் புரட்சி.

## கவியரங்குகளில் கவிஞர்கள் பாடப்பாடக் கவித்திறமை உள்ள அரங்கத்தலைவர் குறிப்பெடுத்துப் பாடுவது வழக்கம். ஆனால் திறமையுள்ள அரங்கத்தலைவர் என்றால் முன்கூட்டியே வாங்கிப்பார்த்து எழுதி விளாசியடித்திடுவார்.

## இரண்டு வருடவிசா கிடைத்ததும்''நாங்கள் இனி உவ்விடம் வரமாட்டோம்.எங்களுடைய காணிகளை விற்கவும்'என்று சனங்கள் எழுத அங்கே காணிகளின் விலைகள் தேடுவாரற்றுக் கிடந்தது என்பது பழைய செய்தி. இப்ப நாசிகளின் அடிக்குப் பிறகு விறாட்டித் தரைகளுக்கே மவுசு ஏறிவிட்டதாம் என்பது புதுச்செய்தி.

## சஞ்சிகையின் ஆசிரியர் ஒருவர் விலகிவிட்டுப் பழையபடி நுழைய முயற்சி செய்தாராம்.அது அவருடைய குப்பைகளை எல்லாம் கிளறிவிட்டதாம்.''சனியை மாத்தப் போய்ச் சனியன் பிடித்த நிலையில் நிற்கிறார்''என்று பேசிக் கொள்கின்றார்கள்.

## வீடியோவின் வருகையால் பிறந்தநாள் கல்யாணம் அந்தயேட்டி எல்லாம் வீடியோவிற்குள் வந்துவிட்டது. புதுசாக ஏதாவது என்று ''வளைகாப்பு''ம் lattest. அதையும் விழுத்தி இப்ப சுமங்கலிபூசையும் வந்துவிட்டது. அதிலும் சுமங்கலி ஆகாதவர்கள் கொண்டாடுகின்றார்கள். திருமணத்திற்கு நாள் வைத்து ஒருமாதம் இருக்குதாம் அதற்குள் சுமங்கலிபூசைக்கு அழைப்பிதழ் வேறு!

## சீட்டுத் தொடங்கும் போது பதின்மூன்று என்று தொடங்கியதாம்.முடியும் போது பதின்நாலாகி விட்டதாம்.

## ஜேர்மனில் மதமாற்றம் செய்யப்பட்ட ஒருவர் எந்தநேரமும் ஏசுவை வணங்கி அனுமதியுடன்தான் எதுவும் செய்வார். even ...tempo பேப்பர் எடுத்துச் சீறுவது என்றாலும். இவருடைய மனைவி Frankfurt வந்திருக்கின்றார். மனுசன் போய்ப்பார்க்கவேயில்லை.கேட்டால்''ஏசு அனுமதி தரவில்லை என்பார்.முடிவு சனங்கள் ஏசுகிற நிலைக்கு வந்து விட்டதாம்.

## ''ஈழத்திலிருந்து''என்று போடுவது இப்ப ஒரு பாஷன் மாதிரி வந்துவிட்டது.சுவிஸிலிருந்து வெளிவரும்''மனிதம்'' என்ற சஞ்சிகை இப்படி எழுதுபவர்களைக் கிண்டல் செய்திருக்கின்றது.

## ராட்டிங்கனில் சரஸ்வதி சபதம் நாடகம் நடைபெற்றது. நன்றாக இருந்தது.டம்பிங்கிலை மட்டுமல்ல டப்பிங்கிலும் தமிழன் பரவாயில்லை என்று காற்றுவாக்கில் வந்து விழுந்தது.

## நவராத்திரி வந்தது.பல இடங்களில் அமர்க்களம் என்று சொல்லவாம்.தமிழர்கள் தங்களுடைய கலை கலாச்சாரங்களைக் கைவிடாமல் இருக்கின்றார்கள் என்பதற்கு இவை மட்டும் நல்ல உதாரணங்கள் அல்ல! தொடங்குகின்ற நேரங்களுந்தான்!! நாலு என்றால் ஐந்து செல்லும் என்பதெல்லாம் மாறி ஆறு ஆறரை தாண்டுவதுந்தான்.

## ஓர் இயக்கத்தையே வசைபாடுகின்ற சஞ்சிகையொன்று.. இது வசைபாடுகின்ற இயக்கத்தைப் பற்றி நண்பர் ஒருவர் வசைபாட அவ்வளவையும் ரேப் பண்ணி அந்த இயக்கத்திற்கு அனுப்பிவைத்திருக்கின்றதாம்.பரவாயில்லையே! இப்படியும் அரசியல் விபச்சாரம் நடக்கின்றதே!!

## ஐந்து தமிழர்கள் அவுட்டோபானில் 18.10.91ல் இறந்தார்கள் அல்லவா? விபத்து நடந்து இரண்டு மணித்தியாலத்தின் பின்னரே வைத்திய உதவி வந்ததாம். வந்தவர்கள் உபகரணங்கள் கொண்டுவராமல் வந்தது பெரிய விசித்திரமாக இருந்ததாக ஜேர்மன் பத்திரிகைகள் எழுதியிருக்கின்றனவாம்.

## முக்காட்டைக் கழுட்டப்போய் ஆளையே மூடிமறைக்க வேண்டிய நிலைமை வந்துவிட்டதாம். இப்ப மொட்டைக் கடுதாசி வேலைதானாம் நடக்கின்றதாம்.

______________________________சீனாமூனா__________________

# கவனித்தீர்களா?

"கடல்" சஞ்சிகையில் இடம் பெற்ற எனது "இது எப்படி இருக்கு" பகுதி பற்றி பல கண்டனங்களும் வந்துள்ளன; அதேவேளை கடலில் இந்தப் பகுதியை பலர் விரும்பிப் படிக்கிறார்கள் என்பதும் மறைக்க முடியாதது. இந்தப் பகுதியைக் கண்டித்தும் கிண்டல் கேலி செய்திருப்பவர்களுக்கும் நான் ஒரு சிறு உதாரணம் சொல்ல விரும்புகிறேன்.

"அடிமைப் பெண்" படத்தின் வெற்றி விழாக் கொண்டாட்டத்தின்போது ...... படத்தில் இடம்பெற்ற காட்சி ஒன்று அறிவியலுக்கு எதிரானது என்று சிலர் குறை கூறினார்கள்.

அந்தக் காட்சி இதுதான்—'மண்டையோட்டினுள் புறாவை விட மண்டையோடு பறந்து திரிகின்றது.'

மண்டையோட்டினுள் புறாவால் இறக்கையடிக்க முடியாது.

இது பற்றிய குறைக்குப் பதிலளிக்கையில் எம்.ஜீ.ஆர்.............. அந்தக் காட்சியை மக்கள் கைதட்டி வரவேற்றதை நீங்கள் அவதானிக்கவில்லையா என்றார்.

கடலில் வந்த "இது எப்படி இருக்கு" பகுதிக்கு வந்த கிண்டல்களுக்கும் இதுதான் எனது பதிலாக உள்ளது; மக்களை வாசிக்கத் தூண்டுவோம். பிறகே கருத்துக்களை எழுதுவோம்.

மக்களிலிருந்து புறப்படுவோம் வாரீர்.

---------------------------------சீனா மூனா-------------

# ஊர்-வலம்

இராஜன் முருகவேல்

17.10.1991.வியாழக் கிழமை.

என் அமுதினுமினிய பத்திரிகை நண்பர்களுடன் மண் வாசனையுடனான உரையாடல்களுடனே, கார் ஒன்றில் றாட்டிங்கன் நகரை நோக்கிய பயணத்தை ஆரம்பித்தேன்.

முகவரி கைவசம் இருந்தாலும் பாதையைத் தவறவிட்டு, மண்டபத்தை அடைய மாலை 5.00 மணிக்கு மேலாகிவிட்டது. அறிவித்தலின்படி நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும் நேரம் மாலை 4.00 மணி. நிகழ்ச்சிகள் ஆரம்பித்துவிட்டனவோ என்ற பதற்றம் எம்மிடையே. ஆனால் 6.00 மணியளவில்தான், பிரம்மசிறி. க. சுவாமிநாதசர்மாவின் பூசையுடன் விழா ஆரம்பமாகியது. தாமதத்திற்கான காரணம் பூசகரின் வருகை என பின்னர் அறிந்தேன்.

திரு. ஏ. கே. நாகராஜாவின் தேவார இசை...திருமதி. எம். சண்முகராஜாவின் இனிய குரல்வளத்தில், திரு. ஈ. உதயகுமார் இயற்றிய "மேதினி மீதே தமிழ் மேன்மையானதே..."என ஆரம்பிக்கும் றாட்டிங்கன் தமிழர் புனரமைப்பு ஒன்றியக் கீதம்...தலைவர், உப தலைவர் உரைகள்...'வாணி விழா மலர்' வெளியீடு....

அழகாகவும், தெளிவாகவும் அச்சிடப்பட்ட மலரைப் புரட்டுகையில் பூநகரியான் எழுதிய 'ஒற்றுமை' என்றொரு கவிதையில் சில வரிகள்....

".................
தீயது சூழும் முன்னே தீர்வதைத் தேடிவைப்போம்
இப்படி புரட்சியாய் நினைத்திட்டாலும்
உருப்படியாய் ஒன்றும் செய்யவே முடியவில்லை
ஒற்றுமையை நாம் எல்லோரும் எக்கடையில்
ஒட்டுமொத்த விலை கொடுத்து வாங்குவது."

சிறுவர் பேச்சுப் போட்டியில் திரு. யூலியஸ் நித்தி, திரு. சின்ன ராஜேஸ்வரன், திரு இராஜன் முருகவேல் மத்தியஸ்தர்களாக, செல்வி. சரிதா நாகராஜா முதலாவது பரிசைத் தட்டிக்கொண்டார்.

நடனமணி திருமதி. ஆம்பூர் தமிழரசி பி. எஸ்ஸி. அவர்களின் மாணவியரது நடன நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. மாணவிகளின் பாடலுக்கேற்ற முகபாவங்கள் நடன ஆசிரியையின் உழைப்புக்குச் சான்று பகர்ந்தன. பல நடன நிகழ்ச்சிகளை ஜேர்மனியில் கண்டு களித்திருக்கிறேன். அதில் வருத்தப்படக்கூடிய விடயம் யாதெனில், நடனமாடுபவர்கள் தமது பெற்றோருடனோ அல்லது உறவினருடனோ 'டொச்'சில் உரையாடுவதுதான். நாம் கலைக்குக் கொடுக்கும் முக்கியத்தை மொழிக்கும் கொடுக்கலாமல்லவா?

கவியரங்கம் திரு. யூலியஸ் நித்தியின் தலைமையில்...திரு. என். தேவதாசன், திரு. எஸ். சிவலோகநாதன், திரு. ஆர். சம்பந்தன், திரு. என். கதிர்காமநாதன், திரு. ஈ. உதயகுமார், திருமதி. கோசல்யா சொர்ணலிங்கம் ஆகியோர் பங்குபற்றினர். திரு. யூ

லிப நித்தி தாயின் வயிறை புலியின் குகை என்றார். திரு. சிவலோகநாதனோ 'க
த்திலே கர்ணனை அழித்திட்ட தாயை காட்டியது கம்பனின் திறமை' என்று கம்ப
ர பாரதத்துக்குள் இழுத்து சாதனை(?) புரிந்தார். பக்தி, தற்போதைய மாவீ
ருக்கான ஆதரவு போன்றவை 'தாய்' என்ற தலைப்பிலமைந்த கவியரங்கில் இ
ம்பெற்றாலும், திருஆர். சம்பந்தன் பெண்களை ஏளனப்படுத்தி வாசித்த கவிதைக்கு
ரு. புலிஸ் நித்தி நன்றி கூறியது வியப்பளித்தது. 'தாய்' என்ற தலைப்பில் பெண்க
ளமட்டும்...அது உண்மையாயிருந்தாலும்கூட...கேவலப்படுத்த வேண்டிய அவசிய
மன்ன? மேற்படி பெண்களின் நிலைக்கு என்ன காரணம் என்பதை திரு. ஆர். சம்பந்
ன் சிந்தித்தால், நல்லதொரு கவிஞர் இலக்கிய ஆர்வலருக்குக் கிடைக்கலாம்.

செயலாளர் திரு. என். கதிர்காமநாதனின் நன்றியுரையைத் தொடர்ந்து, 'பாட்
க்குப் பாட்டு'....இவ்வளவு நேரமாய் நிகழ்ச்சிகளை இரசிக்க முடியாமல் த
டபோட்ட ஊர்ப்புதினப் பேச்சுகளும், சிறுவர்களின் கும்மாளமும் அடங்கின.

இந்நிகழ்ச்சியில் பலர் கலந்து கொண்டார்கள். றாட்டிங்கன் இளைஞர்களின் ஒற்
மைக்கு இந்நிகழ்ச்சியையே சான்றாக்கலாம்.

தமிழர் புனரமைப்பு ஒன்றியம் முன்னெடுத்த 'வாணிவிழா' றாட்டிங்கன் தமிழ் ம
களின் ஒற்றுமையையும், விட்டுக்கொடுத்தலையும் தெட்டத்தெளிவாக விளக்கி
ற்கிறது.

---

27.10.1991...ஞாயிற்றுக் கிழமை. லிவகூசன் நகரம் நோக்கிய பயணத்
த ஆரம்பித்தேன்.

நான் அங்கு செல்கையில் உதைபந்தாட்டப் போட்டிகள் ஆரம்பமாகிவிட்டன.

ஆமாம். ஜேர்மனியில் தமிழர் வாழும் நகரங்களுக்கிடையேயான எழு பேர்
கொண்ட குழுக்களுக்கிடையே போட்டிகள் இடம் பெற்றன. இதில் பன்னிரண்டு வி
ளயாட்டுக் கழகங்கள் மோதின.

ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் என முந்நூறுக்கும் மேற்பட்ட பார்வையாளர்க
ளின் உற்சாகமான கோசங்கள் மண்டபத்தை அதிர வைத்தன.

போட்டி முடிவில் முதலாவது இடத்தை 'முன்சன்கிளாட்பாக்' விளையாட்டுக் க
ழகமும், இரண்டாவது இடத்தை 'பீலபீல்ட்' விளையாட்டுக் கழகமும், மூன்றாவது இ
டத்தை 'டியூறன்' விளையாட்டுக் கழகமும், நான்காவது இடத்தை லிவகூசன் விளை
யாட்டுக் கழகமும் தட்டிக் கொண்டன.

லங்கென்பீல்ட் விளையாட்டுக் கழகம் எட்டாவது இடத்தை எட்டிப் பிடித்தது.
இவ் விளையாட்டுக் கழகத்தில் திறமையான வீரர்கள் இருந்தும், எவரெவர் எந்
தெந்த நிலைகளில் திறமையாக விளையாடுவார்கள் என்ற நெறிப்படுத்தல் இன்
மையே லங்கென்பீல்ட் விளையாட்டுக் கழகத்தின் பின்னடைதலுக்கு முக்கிய காரண
மாகும்.

---

கிறீபில்ட் நகரத்திற்கு சாத்தூர் சேகரன் வந்திருக்கிறார் என்பதை அறிந்து நண்பன் ஒருவரின் காரில், அவரைச் சந்தித்தால் ஏதாவது விசயம் கிடைக்கலாம் என்ற ஆவலில் புறப்பட்டேன்.

சாத்தூர் சேகரன்....... பாரிஸ் வாசகர்கள் நன்கறிந்த பெயர்: காரணம், இந்த இந்தியத் தமிழரின் ஆய்வுக் கட்டுரைகள் பாரிஸ் ஈழநாடு பத்திரிகையில் தொடராகப் பிரசுரமாகின்றன.

சாத்தூர் சேகரன் அநேகமாக நூற்றிருபது மொழிகளில் பாண்டித்தியம் பெற்றிருக்கிறார். உலகத்திலுள்ள மொழிகள் யாவும் தமிழிலிருந்து பிறந்தவை என்பதை ஆதாரபூர்வமாக நிலைநாட்டுவதற்காக, தன் முப்பத்தைந்து வருடவாழ்நாளைச் செலவிட்டு, மொழி ஆராய்ச்சியில் பல உண்மைகளைத் தேடி வெற்றியும் பெற்றிருக்கிறார்: தற்போது தனது ஆதாரங்கள் மூலம் பல மேனாட்டு மொழி வல்லுனர்களைத் திகைப்படையச் செய்திருப்பதை பெருமையுடன் கூறுகிறார்.

ஆதியில் இந்தியாவின் கீழ்ப்பகுதியில் குமரிக் கண்டம் என்ற நிலப்பரப்பு இருந்தது: இக்கண்டம் கடலில் மூழ்கியபோது இதிலிருந்து புறப்பட்ட மக்களே உலகம் முழுவதும் பரவி, நிறத்தாலும் மொழியாலும் சூழலுக்கேற்ப வேறுபட்டுள்ளார்கள் என்பதும், குமரிக் கண்டத்தில் வாழ்ந்தவர்கள் தமிழர்களே என்பதும் இவரது ஆணித்தரமான கருத்தாகும்.

இவரின் கூற்றை முதலில் என்னால் ஜீரணிக்க முடியாவிடினும், அவரது சில ஆதாரங்களைக் கேட்கும்போது, இது ஏன் உண்மையாக இருக்கக் கூடாது என்று எனக்குத் தோன்றியது.

"வணக்கம் திரு. சாத்தூர் சேகரன், 120 மொழிகளில் பாண்டித்தியம் பெற்றிருக்கிறீர்கள். உலக மொழிகள் யாவும் தமிழிலிருந்து தோன்றின என்பதை பல நாடுகளில் ஆதாரங்களுடன் கூறியிருக்கிறீர்கள். இது குறித்து சுருக்கமாகக் கூற முடியுமா?

ஒவ்வொரு மொழிக்கும் அடிப்படைச் சொற்கள் உண்டு. அடிப்படைச் சொற்களிலிருந்தே தமிழில் ஏனைய சொற்கள் உருவாகின: ஆனால் ஏனைய மொழிகளில் உள்ள சொற்கள் எவ்வாறு உருவாகின என்பதற்கு காரணமே இல்லை. ஆனால் அவற்றிற்கான காரணத்தை தமிழில் காட்ட முடியும்.

உதாரணமாக, 'வாக்கு' என்பது வாயிலிருந்து புறப்படுவது என்று பொருள்படும். 'தொனி' என்பது தொண்டையிலிருந்து உருவாவது எனப் பொருள் தரும். இங்கே 'வாய்', 'தொண்டை' என்பன அடிப்படைச் சொற்களாகும்.

'வொய்ஸ்', 'ரோன்', 'ரியூன்' என்ற ஆங்கிலச் சொற்களை அவதானியுங்கள் இவை எவ்வாறு உருவாகின என எவருக்குமே தெரியாது. இவற்றிற்கான அடிப்படைச் சொற்கள் தமிழிலேயே வாய், தொண்டை எனக் காணப்படுகிறது.

இவ்வாறு உலகிலுள்ள எல்லா மொழிகளையும் எடுத்துக் காட்ட முடியும்.

"நீங்கள் இந்த முப்பத்தைந்து வருட மொழி ஆராய்ச்சியில் தமிழ்தான் உலக மொழிகளின் அடிப்படை மொழி என்று உறுதிப்படுத்துவதால் என்ன பலன் கிடைக்கப் போகிறது?

நான் இந்த ஆராய்ச்சியில் ஒரு 'விதி'யைக் கண்டு பிடித்துள்ளேன். இவ் விதியின்படி, தமிழும் வேறு ஒரு மொழியும் தெரிந்த ஒருவர் மூன்றாவது மொழியை ஒரு மாத காலத்தில் கற்றுக் கொள்ள முடியும்.

இந்த விதியை வெளியிட பல ஸ்தாபனங்களின் உதவியை நாடியுள்ளேன். இது விரைவில் சாத்தியப்படும் என நினைக்கிறேன்.

••தற்போது தாங்கள் பிரான்ஸ், ஜேர்மனி போன்ற நாடுகளுக்கு விஜயம் செய்திருக்கிறீர்கள். இதற்கு ஏதாவது முக்கிய நோக்கம் இருக்கிறதா?

பல நாடுகளில் வாழும் மக்களின் அங்க அமைப்புகளை நேரில் பார்த்து, அவை தமிழனின் அங்க அமைப்பிலிருந்து எவ்வாறு சூழலுக்கேற்ப வேறுபடுகின்றன என்பதைத் தெளிவாக்கவே இந்நாடுகளுக்கு வந்திருக்கிறேன்.

குளிர் நாடுகளில் ஒட்சிசன் வாயு நிலத்திற்கு அண்மையில் உள்ளது. இதனால் குளிர் நாடுகளில் வாழ்பவர்கள் கீழ் நோக்கிச் சுவாசிப்பதால் அவர்களுடைய மூக்கு கூராக உள்ளது.

வெப்ப நாடுகளில் ஒட்சிசனானது நிலப்பரப்பிற்கு மேலே செறிந்துள்ளதால் வெப்ப நாடுகளில் வசிப்பவர்களது மூக்கானது அகலமாக உள்ளது.

இதுபோல் பலவற்றை எனது ஆராய்ச்சியின்போது கவனத்தில் எடுக்கிறேன்.

சாத்தூர் சேகரனின் முயற்சிகள் வெற்றி பெற ,வாழ்த்துக்கள் கூறி விடை பெற்றேன்.

---

3.11.1991. மீண்டும் ஞாயிற்றுக் கிழமை.....மீண்டும் லிவகூசன் நகரம்

---------- பரிசளிப்பும் கலை நிகழ்ச்சியும்---------

பிற்பகல் 2:00 மணியளவில் சிற்றுரைகளுடன் ஆரம்பமாகின. மண்டபம் நிரம்பி வழிந்தது. இருக்கைகளைத் தேடிப் பிடித்து அமர்வதற்குள் போதும் போதுமென்றாகிவிட்டது.

லிவகூசன் தமிழ் மக்களுக்கு பல உதவிகளைச் செய்த, செய்துகொண்டிருக்கிற இந்நாட்டு மக்களில் சிலர் கேடயங்களும், மலர் கொத்துக்களும் அளித்துக் கெளரவிக்கப்பட்டனர்.

பரத நாட்டியம்........

ஐசக் இன்பராசாவின் நகைச்சுவையில் மண்டபம் சிரிப்பால் நிறைந்தது. முப்பது நிமிடங்களில் இவரின் நிகழ்ச்சி நிறைவடைந்தது பலருக்கு ஏமாற்றமாக இருந்தது. நிகழ்ச்சிகளை விரைவாக முடிக்க வேண்டுமென்பதாலேயே மேற்படி நிகழ்ச்சி அவசரமாக முடிந்ததென காதில் விழுந்தது.

ஆக்ஸ்பேர்க் நகரில் வசிக்கும் நான்கு சகோதரிகளின் (சிறுமிகளின்) டப்பாங்குத்து நடனம்..... திரைப்பட பாடல்களுக்கேற்ப ஆடினார்கள். எல்லாமே ரஜனி காந்தின் படங்களிலிருந்து பொறுக்கி எடுக்கப்பட்ட காதற்பாடல்கள். கட்டிப் பிடித்தல், கன்னம் தேய்த்தல், ரஜனியின் ஸ்டைல் கலந்த ஆட்டம்....என்பன யாவுமே அப்படியே திரையில் தோன்றுவதுபோலவே வியக்கத்தகு முறையில் திறமையாக அந்தச் சிறுமிகள் மூலம் மேடையில் வெளிவந்தபோது; குறிப்பாக இளைஞர்களின் விசில் ஒலிகளுக்கும் கும்மாளங்களுக்கும் எல்லையே இல்லை.

இந்தச் சந்தர்ப்பத்திலே நண்பர் ஒருவர் காதைக் கடித்தார்.

'பாரும் ராஜன்... இந்தக் குழந்தைகளை இப்படி மட்டமான பாடல்களுக்கு ஆட வைக்கும் பெற்றோரை என்னென்பது? இந்தச் சிறுமிகள் பருவமடைந்த பின்பு இப்படி ஆட முனைந்தால் பெற்றோர் பொறுப்பார்களா?'

இதைக் கேட்ட இன்னொருவர் கூறினார்......

'இதுபற்றி பெற்றோருக்கு தெரியாதா என்ன? அந்த சிறுமிகளின் திறமைகளைப் புகழ்வதை விடுத்து, ஏன் இந்த நினைப்பு? கலையை கலைக்கண்ணுடன் பார்க்க வேண்டும்.'

கண்களில் கலைக்கண் என்று கூட இருக்கிறதா என்ன?

அறிவிப்பாளர் என்.ரி. ஜெகனின் குரலில் இலங்கை தமிழ்ச் சேவை இரண்டு நினைவுக்கு வந்தது.

பிராங்போட் தமிழ் மன்றத் தலைவர் சிறீபதியின் மாஜா ஜால வித்தை சபையோரை, கூடவே என்னையும் பிரமிப்பில் ஆழ்த்தியது. இந்நிகழ்ச்சியை அவர் இலவசமாகவே நிகழ்த்தினார் என்பது மேடை அறிவித்தலில் தெரிய வந்தது.

நிகழ்ச்சியின் முடிவில் மனோ—பாலாவின் இசை நிகழ்ச்சி இடம்பெற்றது. தமிழ் கலைஞர்கள் மேனாட்டுக் கலைஞர்களுக்கு இளைத்தவர்கள் என்பதை 'லம்பாடா இசை எடுத்தியம்பியது.

மண்டபம் நிரம்பிய பார்வையாளர்களுக்கு இலவசமாக தேனீர், சிற்றுண்டி வழங்கினர் வீவகூசன் வாழ் தமிழர்.

உதைபந்தாட்டத்தில் கலந்து கொண்ட சகல விளையாட்டுக் கழகங்களுக்கும் வெள்ளிக் கிண்ணங்கள் பரிசளிக்கப்பட்டன.

மேற்படி விழா இரவு 8.00 மணியளவில் நன்றியுரையுடன் நிறைவுற்றது.

இந்தியாவிலிருந்து அண்மையில் ஜேர்மனிக்கு விஜயம் செய்த அருட்தந்தை அந்தோனிசாமி அவர்களுடன் ஒரு பேட்டி—பரதன்..........

கே: நீங்கள் ஜேர்மனிக்கு விஜயம் செய்ததன் நோக்கமென்ன?

ப: இங்கு வாழும் தமிழ் அகதிகளை இந்தியாவுக்கு அனுப்பி வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு இங்குள்ள அரசுகள் ஆலோசிப்பதால், பேர்லினிலுள்ள அகதிகள் நிறுவனம் இதுபற்றிய கருத்துக்களைக் கேட்பதற்காக என்னை அழைத்திருந்தது.

கே: இம்முடிவு பற்றி தங்கள் கருத்தென்ன?

ப: அகதிகளை இந்தியாவுக்கு அனுப்பி மறுவாழ்வு அளிப்பதென்பது முடியாத காரியம் என்பதை அவர்களுக்கு தெரியப்படுத்தியதுடன் இது நம்ம மக்களுக்கு துன்பத்தையும் கஷ்டத்தையும்தான் வரவழைக்கும் என்பதையும் தெரியப்படுத்தினேன்.

நன்றி— 'மண்'.........


யாழ்ப்பாணத்தில்
இருந்து
கொழும்புக்கு
பல் பிடுங்க
ஒருவன்
வந்தான்

ஏனப்பா ?
அங்குதானே
பெரிய டாக்டர்
இருக்கினம்....
என்றதற்கு

இருந்தெவ்ள
வாய் திறக்காமல்
பல் பிடுங்க
மாட்டார்களே...

வாய் திறந்தால்
சூடு போடச் சொல்லி
உத்தரவு அல்லவா
அங்கே என்றான்
வந்தவன்

● ● ●




மரண வியாபாரிகளே...
மலிவு விலைக்குக்
கொண்டு வந்தீர்கள்
ஆனாலும் – அதிலே
அடையாளம்
காணக் கூடியதான
நீருபடி தந்தால்
என்ன....?
எல்லாமே முண்டங்கள்
என்றால் யாருக்கு
யார் கொள்ளி வைக்க..?
விவேகத்தையே
கிடையாதா....?

● ● ●

மலையகத்து நண்பன்
மாடசாமிக்கு – இந்த
மடச்சாமியின்
அன்புக் கடிதம்

தமிழீழ விடுதலைப்
போராட்டத்துடன் – மலையகத்
தமிழர் பிரச்சனையும்
இணைக்க வேண்டும்
என விழித்திருந்தீர்

சற்றே பொறும்
தற்போது எங்களுக்குள் ஆளுண்டு
சுட்டுக் கொள்ளப் போதும். —அது
அற்றே போனால்..?
வெற்றே நம் துப்பாக்கி
விட்டிடுவோமா ?
உங்களையும் இணைப்போம்
அதுவரை பண்புடன்
பொறுத்திருக்க.

அன்பன்
மடச்சாமி
18.07.90

# சந்திப்பு

'சோழியான்'

கதவு தட்டப்பட்டதும் மூவருக்கும் என்ன செய்வது என்று புரியவில்லை. ஒருவரையொருவர் பார்த்து விழித்தனர்.

அவ்வளவுதான்... பொக்கற்றால் சில நூறு போகப் போகிறது என்ற பயமோ அல்லது அந்த காசுகள் அழிவுக்கு உதவப் போகின்றனவே என்ற அச்சமோ தெரியவில்லை.

கதவு மீண்டும் தட்டப்பட்டது... சற்று பலமாக....

'போய் திறவன்' என்பதுபோல் பார்த்தான் யோசேப்.

சந்திரன் போய் திறந்தான். அங்கே 'அவர்கள்' இல்லை. மாறாக சண்— அவன்தான் சண்முகநாதன்.

'அப்பாடா' என்ற நிம்மதிப் பெருமூச்சு சுகுமாரிடம்.

"படுபாவி....எங்களைப் பயப்பிடுத்திப் போட்டியேடா?" — வெளிப்படையாகவே கூறினான் சந்திரன்.

"பயப்பிடுத்திப் போட்டனோ... அடடா.... அவசரகால நிதிக்கு வாறவை என்டு நினைச்சியளே.... அவங்கள் இன்டைக்கு வரேலையாம். இப்பதான் டெலிபோன் வந்தது. அவங்கடை ஆக்கள் ஆரோ காரிலை அடிபட்டுச் செத்துப் போச்சினமாம். பாவம்.... அஞ்சு பேர்... துடிக்கப் பதைக்க ......"

'வரவில்லையே' என்று சந்தோசப்படுவதா அல்லது அநியாயமாகக் காரில் அடிபட்டுச் செத்த உயிர்களுக்காக வேதனைப்படுவதா?

'என்ன இருந்தாலும் மனித உயிர்கள்.... அநியாயமான முறையில் அழிவதை வேடிக்கை பார்க்க முடியாது. ஆனால் இத்தகைய உயிர்களுக்காக அறிப்புடைத்து—நகர ரீதியாக கொம்பியூட்டரில் அஞ்சலி ஏடுகள் வெளியிட்டோரும் அணி திரண்டோரும் —தாயகத்தில் சர்வாரியாக துப்பாக்கி மூலமும் பஞ்சம், பட்டினி மூலமும் மின் கம்பம் மூலமும் மலினப்படுத்தப்படும் உயிரிழப்புகளுக்காகவும்— ஈவிரக்கம் காட்டி அந்த உயிர்களையும் மனித உயிர்களாக நினைப்பார்களேயாயின் — அது எவ்வளவு மாற்றங்களுக்கு இடமளிக்கும்?

"உங்களுக்கொரு விசயம் தெரியுமே..... கல்வண்டாயிலை ஆமி வந்திட்டாங்களாம்.... இனி அவ்வளவுதான்... பிரேமதாசா சொல்லித்தான் செய்யுறானாம்....."— இது சங்.

"சும்மா போடா விசர்க்கதை ."

"என்ன விசர்க் கதையோ... தீவுப் பகுதியை ஆமி பிடிச்சுப் போட்டான். இப்ப கடலாலை கல்வண்டாய்க்கு வந்திட்டான். "

"ஐயோ கடவுளே... கல்வண்டாய்க்கு வந்தால் அங்காலை வட்டுக்கோட்டை கொஞ்சத் தூரந்தானே.... ஐயோ--- என்ரை வீட்டுக்காரச் சனங்கள் என்ன செய்யுதுகளோ.... அப்பவும் படிச்சுப் படிச்சு எழுதினனான் கொழும்புக்கு வாங்கோ எண்டு... " என்று புலம்ப ஆரம்பித்தான் யோசேப்.

"யோசேப்... . இப்ப ஒப்பாரி வைச்சு என்ன பயன்? இது எப்பவோ தெரிஞ்ச விசயந்தானே... கொழும்புக்க வந்தால்மட்டும் நிரந்தரமாய் பாதுகாப்பு கிடைச்சிடுமே. எத்தினை சனம் அழிஞ்சு போச்சு...... இன்னும் எத்தினையோ அழியப் போகுது. கொஞ்சக் காலத்தாலை பாரன்..... இலங்கை தனிச் சிங்கள நாடாகப் போகுது. அந்த விசயத்திலை உதவி செய்தவை எண்ட பெருமை எங்கடை பொடியளுக்கும், மாதாந்த நிதி அவசர கால நிதி எண்டு கொடுத்தவைக்கும்தான் சேரும்....."

"அப்பிடியெண்டா இதுக்கெல்லாம் ஒரு முடிவே கிடையாதா?"

"உண்மையைச் சிந்திச்சு உணராமை 'தமிழன்' எண்ட வெறும் வெறி பிடிச்சு சனங்கள் சிறுசிறு 'அற்றாக்'குகளிலை சந்தோசப்படவோ ஆறுதல்படவோ அலையுறவரையிலை இதுக்கு முடிவில்லை. இப்பிடியே கும்பல் கும்பலாய் அழிஞ்சு கொண்டிருக்க வேண்டியதுதான்.... "

"அப்ப ஒரு காலத்திலை அங்கை தமிழரே வாழமாட்டினம் எண்டா சொல்லுறாய் ?"

"ஏன் வாழ மாட்டினம்? அங்கை இருக்கிறவை ,குறிப்பாக இளசுகள் அழிஞ்ச பிறகு இலங்கையிலை அமைதி ... சமாதானம்... இனப் பிரச்சினை தீர்ந்து விட்டுது என்று பேப்பரிலை, ரீவியிலை, றேடியோவிலை எல்லாம் பரபரப்பாய் பந்தி பந்தியாய் வரும். அப்ப இஞ்சை இருக்கிற அகதியளை 'இனி இலங்கையிலை பிரச்சினை இல்லை, நீங்கள் அங்கை போய் வாழலாம்' எண்டு சொல்லி அனுப்ப வெளிக்கிடுவாங்கள். ஆர் கண்டது? "

"சரி சரி. உதுகளைப் பேசுறதாலை இப்ப என்ன வரப் போகுது ;வீணான கவலையள்தான் தலைக்கேறும். அதாலை என்ன பிரயோசனம்..... ? இதுகளைத் தட்டிக் கேட்க ஒண்டு ரண்டு உதிரியள் இருந்து என்ன வந்துவிடப் போகுது? அதுகள் கூட வெளியே வரப் பயந்து கொண்டு புனைபெயருக்குள்ளோ , தபால் பெட்டிக்குள்ளோ ஒளிந்திருந்து உண்மைக்காகப் பாடுபடுவது எந்தளவுக்குப் பயனாகப் போகுது? நிண்டு போராடுறவை அழிஞ்ச பேந்துதான் இந்த பாசிச எதிர்ப்பு உதிரிக் கூட்டம் வெளியே முகம் காட்ட முடியுமெண்டால், அப்ப கதைக்குறதுக்கு இருக்குமோ தெரியாது. சில உதிரிகளின் சுய குணங்கள் தமி

ம் கூடல்களில் சுரண்டல்களாகவும் வெளிவருகின்றன. இந்த உயிரினங்களைக் கூட இனங்காண்பது கஷ்டமாகத்தான் இருக்கிறது...."

"அதோடை கடந்த காலம் ஆரை நம்புறது, ஆரை நம்பக்கூடாது என்ட தெளிவில்லாத ஐமிச்சத்தை உருவாக்கிப் போட்டுது..... இந்த நிலையிலை மக்களுக்கு மார்க்கம் காட்ட எவராலை எப்படி முடியும் என்டு நினைச்சுப் பார்க்க முடியேலை."

சந்திரன் தேனீர் பரிமாறினான்.

"இன்னுமொரு சங்கதி தெரியுமே? நாயக அகதியளுக்காய் படம் போடுறமாதிரி இப்ப இஞ்சை கொண்டாடுற விழாக்களிலை அகதியளுக்காய் அதிர்ஷ்டலாபச் சீட்டு வந்திட்டுது. பாவம் சனங்கள்... இரண்டு மார்க்கத்திலை மேடையிலை விளம்பரமாகி இங்கை இருக்கிறவேன்ரை இருப்புகளுக்கு ஆதார மனுதுகள்... "

"ஓமோம்... இன்னும் இப்பிடி இப்பிடி எவ்வளவெல்லாம் வரப் போகுதோ ஆர் கண்டது? இதெல்லாம் தாயையும் தாரத்தையும் மேடையிலை ஆட விட்டு காசு சேர்க்கிற மாதிரி என்டு பலருக்குத் தெரியேலை...."

"இப்பிடி கதைச்சாலும் தாங்களும் செய்யாங்கள் செய்யுறவனையும் செய்ய விடமாட்டாங்கள் என்டும் சொல்லுவாங்கள்..."

திடீரென ஒரு அலறல் சத்தம்.

பக்கத்து அறையிலிருந்துதான் கேட்டது.
'நாசியள் வந்திட்டாங்களோ ?'
'எத்தினைக்குப் பயப்பிட வேண்டிக் கிடக்குது'
அது நாதனின் அலறல் சத்தம்.

சன், யோசேப், சந்திரன், குமார்.....

எல்லோரும் நாதனின் அறையை நோக்கி ஓடினார்கள்.

– தொடரும்.....

நம் உடம்புக்கு சிறிதளவு அயடீன் என்ற இரசாயனப் பொருள் தேவைப்படுகிறது. இது உணவின் மூலம் கிடைக்காவிட்டால் கழுத்துப் பகுதிகளில் கட்டிகள் உண்டாகின்றன. ஆகவே அயடீன் சத்துள்ள மீன் வகை உணவுகளை உண்ண வேண்டும்.

0 0 0

– 'கண்ணன்'

Anonymous 4297C3404

# கேள்வி பதில்

## திருவாளர் புத்திஜீவி

திருவையூர்ச் சிவா 4630 BOCHUM

தற்போது தமிழன் தலைநிமிர்ந்து நிற்கின்றானா? தலைகுனிநது நிற்கின்றானா?

போரில்(வில்லைத்தட்ட) குனிந்து நிற்கின்றான். சமாதானத்தில்(தனதுwi11ஐக் காட்டுவதில்) நிமிர்ந்து நிற்கின்றான்.

தற்போது அரசியல் தஞ்சம் கோரித் தங்களை மறந்து சொர்க்கத்தில் வாழும் தமிழ் மக்களுக்கும்,தற்போதைய விடுதலைக் கெடுபிடி யுத்தத்தின் கொடுமைக்குள் வாடி வதங்கும் தமிழர்களையும் ஒப்பிடுக?

!! ஏழைகளுக்கும் கோழைகளுக்கும் உள்ள வித்தியாசம். வழி தெரியவில்லை.இங்கு மொழி தெரியவில்லை

தமிழனில் புத்திஜீவிகள் எங்கு வாழ்கின்றார்கள்? அவர்கள் எப்படிப்பட்டவர்கள்?

தமிழர்களில் புத்திஜீவிகள் மலிந்து காணப்படுகின்றார்கள். தம்மைப் புத்திஜீவிகளாகப் பிரகடனம் செய்து கொள்ளப் பலர் ஆலாய்ப் பறக்கின்றார்கள். புத்திஜீவி என்று முத்திரை குத்திக் கொள்வதன் மூலம் சமகாலப் பிரச்சினைகளிலிருந்து தப்பிக்கொள்ளமுடிகின்றது. (அடியேன் அந்த ரகம் அல்ல!)

இன்று தேவையான பிரச்சினைகளை விட்டுத் தேவையில்லாத வற்றை விவாதிப்பவர்கள், மற்றவர்களுக்குப் புரியாத சிலகலைச்சொற்கள், சில தத்துவஞானிகளின் பெயர் (லுக்ஸம்பேர்க்/சிங்ஷாங்குங்) இருந்தாற் போதும் புத்திஜீவிகளைக் கண்டுபிடித்துவிடலாம். பிரயோசனமில்லை!

ஈழத்தமிழனின் தலைவிதி என்பதா? தலைவனின் வழி என்பதா?

இரண்டும் ஒன்றாகி, ஒன்றானதை இரண்டாக ஆக்கிவிடமுடியாததைத் தமிழில் அத்வைதம் என்பார்கள்

இலங்கையின் பொருளாதாரம் றப்பர் தேயிலை தென்னம் பொருட்கள் மற்றும் வெளிநாட்டுச் செலவாணி என்றிருப்பது போல ஜேர்மனியின் பொருளாதாரம் என்ன?

ஜேர்மனியின் பொருளாதாரம் இரும்பு, நிலக்கரி போன்ற ஏராளமான கனிப்பொருட்களில் தங்கியுள்ளது. இவை மூலப் பொருட்களாகளும் முடிவுப் பொருட்களாகவும் பெருமளவில் ஏற்றுமதியாகின்றன. பீற்கிழங்கும் அதிலிருந்து பெறப்படும் சீனி குடிவகை, என்பனவும் இரசானப் பொருட்களும் ஜேர்மனிக்குச் செல்வத்தை வழங்கிக் கொண்டிருக்கின்றன. ஆனால் பெரும்பாலானவை ஆயுதங்களாகவும் வெடிமருந்தாகவும் ஏற்றுமதியாகின்றன என்பது குறிப்பிட வேண்டியதாகும்.

தங்களின் அடுத்த கட்டம் என்ன?

இந்தக் கேள்வியை இடம்மாற்றி அனுப்பியிருக்கின்றீர்கள். ஒரு ஜனநாயக சமூகத்தில் பத்திரிகைகளால், அவற்றின் எழுத்துச் சுதந்திரத்தைப் பிரயோகித்து ஒரு பொதுசன

அபிப்பிராயத்தை உருவாக்கமுடியும்.கடலும் அதைத் தான் செய்ய விரும்புகின்றது.கடல் அரசியல் இயக்கம் என்று கருதிவிடாதீர்கள்.

ம.க. 5100 AACHEN

நானும் சஞ்சிகையொன்று வெளியிடலாம் என நினைக்கின்றேன்.என்ன சொல்ல விரும்புகின்றீர்?

வெளிநாடுகளில் சஞ்சிகை வெளியிடுவது மிகச் சுலபமான வேலை.இங்குள்ளவர்கள் மத்தியில் வாசிக்கின்ற ஆர்வம் மிகமிகக் குறைவாக இருக்கின்றது இது உங்களுக்குப் பிளஸ் பொய்ன்ற்.ஏதோ ஒரு சமூகசேவைத் தாபனம் உங்களுக்கு உதவிசெய்யத் தயாராக இருக்கின்றது. இது அடுத்த பிளஸ்.வீரகேசரி.ஈழநாட்டிலிருந்து வெட்டிப் போட்டலரட் அடித்து ஒட்டித்தர உங்களுக்கு இரண்டொருவர் இருக்கின்றார்கள்.இது முக்கியமான பிளஸ் ஆகின்றது.இனி என்ன? சந்திப்புக்களில் சஞ்சிகையாளராகப் Promote ஆகிச் சமாய்த்திட வேண்டியதுதானே! இதே வேலையை இங்கு பலர் செய்து கொண்டிருப்பதால் வாங்கிக் கட்டிக்கொள்ளவும் தயார் செய்து வருக!

தங்களைப் புத்திஜீவி என்று சொல்லிக் கொள்கின்றீரே! அந்த மணங்கூட உம்மிடம் தெரியவில்லையே?

இது ஒரு வர்க்கக் குணாம்பச பிரதிபிம்பத்தின் வெளியீடான கேள்வியாகக் கொள்ளமுடியும். பரிணாமம் பெற்ற இலங்கியல வாதத்தின் படிமானமாகக் கேள்வி அமையவில்லை. (இப்ப சரியா?)

மாக்ஸிஸம் காலாவதியாகி விட்டதாமே?

மனிதநேயம் என்றமதம் உலகில் இருக்கும் வரை மாக்ஸிஸமும் இருக்கும்.அது காலவிதியாகிவிட்டது.

கோர்பாச்சேவ் என்ன செய்து கொண்டிருக்கின்றார்?

கோர்ப்பாச்சேவிற்கே தான் என்ன செய்து கொண்டிருக்கின்றேன் என்பது தெரியுமோ தெரியவில்லை. ஒன்று மட்டும் தெரிகின்றது.ஹிட்லரால் முடியாத பார்பரோஸ் திட்டம் கொர்பாச்சேவினால் நடாத்தப் படுகின்றது.(ரஷ்ஷியாவை உலகப்படத்தில் இருந்து நீக்கக் ஹிட்லர் போட்ட திட்டம் பார்பரோஸ் திட்டம்)

பிரேமதாஸாவிற்கு ஆதரவாக ஈரோஸ் எம்பீக்கள் பாராளுமன்றம் செல்லவிருக்கின்றார்கள் என்ற பேச்சு அடிபடுகின்றதே உண்மைதானா?

பொறுத்திருந்தால் தெரிந்துவிடுகின்றது

கடலில் யார் யார் எழுதுகின்றார்கள்?

கடலில் எழுதுகிற எல்லோரும் தங்கள் பெயரையோ புனை பெயரையோ தருகின்றார்கள்.புரட்டிப் பார்க்கவும்

மொட்டைக் கடிதம் எழுதுகின்றவர்களைப் பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?

வாலையிலை ஆடினவர்கள் வயது போனபின்னர் காலைக் காலைத் தூக்கி ஆட்டுவார்களாம்.அதே நிலைதான் இங்கும்.புகழ் விரும்பாத எழுத்தாளர் திலகம் என்று பட்டம் கொடுத்துவிடலாம்.

# உதவி என்று உபத்திரவமா?

### சுப்பு அண்ணை

யாராவது உறவினர்கள் வீடுகளுக்குப் போனால், 'தேனீர் குடியுங்கோ.... சாப்பிடுங்கோ...' என்று உபசாரம் என்கிற பெயரால் உபத்திரவம் தருகிறார்கள்.

என்னுடைய மகளுடைய பிறந்தநாளுக்கு சொல்வதற்காக இருபத்தைந்து வீடுகளுக்கு மேல் செல்ல வேண்டியிருந்தது. எல்லா வீடுகளிலும் ஓவல், தேனீர், கோப்பி, இளநீர், சர்பத், ........இப்படி தடல்புடல் உபசாரம்.

"வேண்டாம், இப்பதான் குடிச்சனான்" என்று மறுத்தபோது,

"நீங்கள் எங்கடை வீட்டிலை எண்டால் குடிக்க மாட்டீங்கள். அவன்ரை வீட்டிலை எண்டால் குடிப்பீங்கள்."

இப்படி குறை, கோபம்... அவ்வளவும் குடித்ததால் வயிறு புகைஞ்சு வாந்தி எடுத்து நான் பட்ட வேதனை இவர்களுக்குப் புரியாது.

சிறிது நேரம் பேசிவிட்டு புறப்பட்டால், 'சாட்டுக்கு வந்துவிட்டு ஓடுறீங்கள்' என்ற குறை.....வீட்டில் எவ்வளவு வேலைகள் இருக்கிறது என்பது இவர்களுக்கு புரியாது.

மற்றவர்களுக்கு உபத்திரவம் கொடாமல், 'தேனீர் தரவா?' என வினவிவிட்டு, வேண்டாம் என்றால் விட்டுவிடுவதே நல்லது. குறை கூறாது அளவோடு பேசி அனுப்புவது.... இதுவே உண்மையான உபசரிப்பு ஆகும்.

மது வகைகள் குடிக்கும்போது குடிப்பவரைக் கேட்காமல் 'கிளாஸ்' வார்ப்பது, குடிக்காதவர்களைக் கட்டாயப்படுத்துவது போன்றவையும் ஒருவகை இம்சையே. ஆகவே உண்மையான உபசரிப்பை உணர்ந்து மற்றவர்களை உபத்திரவம் அடையச் செய்யாமல் உபசரிக்கப் பழகிக் கொள்வோம்.

0000000000

# நான் தண்டனை கோருகிறேன்

-பாப்லோ நெருடா

நன்றி. சமர்

நான்
அழுவதற்கு வரவில்லை—அவர்கள்
விழுந்த இடத்தில்
இன்னும்
உயிரோடு இருப்பவர்களே
உங்களிடம் பேசத்தான்...
உங்களை நோக்கியும்
என்னை நோக்கியும்
நான்
வேண்டுவது இதுதான்...
இறந்து கிடக்கும்
நம்மவர்கள் பேரால்
கேட்கிறேன்...
தண்டனை அளியுங்கள்

நமது
தந்தையர் நாட்டு மண்மீது
சிவப்பு ரத்தத்தை
சிதற வைத்தவர்களுக்கு
தண்டனை அளியுங்கள்

யாருடைய
ஆணையின் பேரில் இந்த
அக்கிரமங்கள் நடந்தனவோ
அந்தத் துரோகிகளுக்கு
தண்டனை அளியுங்கள்

இந்த சவங்களின் மீது
சிம்மாசனம் ஏறிய
அந்தத் துரோகிகளுக்கு
தண்டனை அளியுங்கள்

மறப்பவர்களுக்கும்
இந்தக் கொடுமைகளை
மன்னிக்கச் சொல்பவர்களுக்கும்
தண்டனை அளியுங்கள்

நான் எல்லோருடனும்
கை குலுக்க விரும்பவில்லை
ரத்தக் கறை படிந்த
கரங்களைத்
தொடுவதற்கே விரும்பவில்லை
நான்
தண்டனை கோருகின்றேன்....

இங்கேயே
இப்பொழுதே...
திறந்த வெளியிலே
நீதி வழங்குங்கள்
அவர்களுக்குரிய தண்டனையை
என்
கண்முன்னே
நிறைவேற்றுங்கள்....

தூர தேசங்களுக்கு
அவர்களை
தூதவராய் அனுப்புவதை
அமைதி வரும் வரை
அவர்களை
அறைகளில் அடைப்பதை
நான்
அடியோடு விரும்பவில்லை

# நம் மண்ணில்...

-திருமதி. உமா கதிர்காமநாதன்

போர் கொண்ட மண்ணும் இடி கொண்ட விண்ணும்
கதியின்றிக் கொட்டும் மழைதானோ கண்ணீர்
முடிவின்றித் தவிக்கும் விடிவிற்கு ஏங்கும்
பல உள்ளம் தினமும் தூங்காது தவிக்கும்
துயர் கொண்ட ராத்திரிகள் எத்தனைதான் நம்மண்ணில்?

கொதிக்கின்ற மக்கள் சிந்திக்கும் வேளை
தினமெங்கள் நெஞ்சில் பொங்கட்டும் வீரம்
நற்படை கொண்டு நாமும் தமிழென்ற தாய்க்கு
விடிவென்ற நிலவை அடைகின்ற நாளை
எதிர்பார்க்கும் ராத்திரிகள் எத்தனைதான் நம்மண்ணில்?

புயலொன்று வந்து அழிகின்ற நாடும்
தீயொன்று வந்து எரிகின்ற வீடும்
போரிடும் வீரர் சிந்திக்கும் இரத்தமும்
வீணாகப் போகும் தமிழனின் வாழ்வும்
மாறாதோவென ஏங்கும் ராத்திரிகள்
எத்தனைதான் நம்மண்ணில்?

(தமிழர் புனரமைப்பு ஒன்றியம் (நாட்டிங்கன்) வெளியிட்ட வாணி மலரில் இருந்து..........)

# நம் முயற்சிகள்

-ஜே.வி.

இனியொரு
விதி செய்வோம்
வா தோழா...
பூகோள உருண்டையில்
மா (க்கள்) மேடழித்து
மனிதக் குழிகளை
நிரப்புவோம்....
நம் முயற்சிகள்
வறண்ட பாலைகளல்ல
செழித்து வளரும்
வயற்பரப்புகள் தான்...

# பார்வை

-விபு...

இனிமையானவளே...
நீ
என்னை
ஆயிரம் முறை
பார்த்தாலும்
நான்
நேசிக்கப் போவதெல்லாம்
உனது
ஆயிரத்தோராவது
பார்வையைத்தான்....

# முத்தாரம்

கடல் சஞ்சிகையை வாசித்துவிட்டு மிகவும் சந்தோசப்பட்டோம். அதில் எங்களுக்குத் தேவையான கேள்வி பதில், சிறுகதை எல்லாம்இருப்பதால் , கடல் சஞ்சிகையை தொடர்ந்து பெற விரும்புகிறோம்.

........தி. ஜெயபிரபா,
4630 போகும் 7.

தங்களின் வெளியீடான 'கடல்'சஞ்சிகை கிடைக்கப் பெற்றேன். தற்போது கடலில் மூழ்கி முத்துக் குளித்துக் கொண்டிருக்கிறேன். இக்கடலின் அலைகள் மிகவும் துணிச்சலுடனும், மிகவும் தெளிவாற்றல் கொண்டதாக இருப்பதாலும் இக்கடலில் தொடர்ந்து முத்துக் குளிக்க விரும்புகிறேன். இச் சமுதாய சஞ்சிகை மூலம் பலர் "உண்மைகளை" அறியக் கூடிய வாய்ப்புக் கிடைத்துள்ளது. இன்று தமிழ் மக்கள் எதிர் நோக்கும் பிரச்சனைகள் பற்றி மிகத் தெட்டத் தெளிவாக வெளியிட்டுள்ளதற்கு எனது பாராட்டுக்கள். "அதிமேதாவியின் அவசரக் குறிப்புகள்" பகுதியில் விளக்கப்பட்டுள்ள உண்மையை வாசித்து நான் மிகவும் திருப்தியுடன் இருக்கிறேன். அலை யுலையில் இலங்கைத் தமிழரின் நிலைமையும் இந்தியாவின் நிலைப்பாடும்பற்றி மிகத் தெட்டத் தெளிவாக அதிமேதாவியின் அவசரக் குறிப்புகள் விளக்கியிருக்கின்றன. இதைப் புரிந்து கொள்ள வேண்டியவர்கள் புரிந்து கொள்ள வேண்டியது மிகவும அவசியம். அப்போதுதான் தமிழருக்கும் விடிவு; வருங்கால சந்ததிக்கும் விடுதலை; தமிழனும் தலை நிமிர்ந்து நிற்பான்.

........'திருவையூர் சிவா'
4630 போகும் 1.

எனக்கும் நண்பர்களுக்கும் கடல்பற்றி சிறு சச்சரவு. கடல் இந்திய பத்திரிகைகளின் தரத்திற்கு தாழ்ந்துவிட்டதாகக் கூறினான். சமூகத்திலுள்ள குறைபாடுகளை வெளியே கொண்டு வருவது ஒரு பத்திரிகையின் கடமை என்பது எனது கருத்து. எனவே 'இது எப்படி இருக்கு' பகுதி தொடர்ந்து வருவதால், தவறு விடுபவர்கள் வெட்கத்திலாவது திருந்த வாய்ப்புண்டு.

........சி. விபுலானந்தன்,
(?), ஜேர்மனி.

---

# உண்மைக்குப் பயந்த மனச்சாட்சி

இரா. இராஜேஸ்கண்ணன்

"மனச்சாட்சி" என்பது எமது மனங்க
h ஆசைகள், கற்பனைகள், இலட்சியங்கள்
பான்ற மனத்தின் செயற்பாடுகளை கட்
்படுத்தி அதனை நல்வழிப்படுத்தி ஒழுங்
செய்வதற்காகவும், நியாய அநியாயங்
ளை வேறுபிரிந்து வெளிக்காட்டுவதற் நம்
மைந்த மனத்தின் அறிவுறுத்தலே மனச்ச
ாட்சி.

நாம் எதை நம்புகிறோமோ அதை
றைவேற்ற முயல்கிறது நம் மனம். நமது
ண்ணம் ஆழமான உணர்வுகளுடன் கலக்கப்
டும்போது நம்பிக்கையாய் மாறுகின்றது
மது நம்பிக்கைகளே நம்வாழ்வை அமை
கின்றன.

நமக்கும் நம்மனச்சாட்சிக்கும் உள்ள
றவு ; நம்மனச்சாட்சிக்கும் நம் செயலு
கும் உள்ள உறவு — இவைகள் நமது எண்ண
ங்களை, நடத்தைகளை நிர்ணயிக்கின்றன.
உண்மைகள் என்றுமே உறங்குவதில்லை' எ
று சொல்வார்கள். பதவி, அந்தஸ்து, கெ
ளரவம், அதிகாரம் கொண்ட மனிதர்க
உண்மைகளின் மத்தியில் வாழ்வதில்லை..
வர்களுடைய வாழ்க்கையில் பொய்யும்,
த்தலாட்டமும்தான் அசலாகுகின்றது. அந்
இடத்தில் மனச்சாட்சி பயந்து ஒதுங்கு
கின்றது:

உண்மைகள் தாழ்ந்துபோய் மறைக்கப்
பட்டு பொய்களும் பித்தலாட்டமும் ஏன்
வர்களுடைய வாழ்க்கையில் மேலோக்கி
ற்கின்றன? காரணம் அவர்களுடைய வாழ்
கையில் அவர்களுக்குக் கிடைத்த பதவி;
வர்களுக்குக் கிடைத்த அந்தஸ்து; அவர்க
ளுக்குக் கிடைத்த கௌரவம்; அவர்களுக்
குக் கிடைத்த அதிகாரம். இப்படியான நி
லைகள் வந்ததும் தனது பழைய நிலைக
ளை மனிதன் மறந்து விடுகின்றான்.

நம்மனத்தின் மீது எதும் தப்பில்லை;
நாம்தான் பல்வேறு காரணங்களுக்காக
நம் இலட்சியத்தை மாற்றிக்கொண்டே இ
ருக்கிறோம். நமது இலட்சியங்களில் நமக்
குள்ள நம்பிக்கை உறுதிவேராக நாம் இ
டங்கொடுப்பதில்லை. நம்பிக்கைகளை இழ
க்கும்போது, நிதானம் தவறும்போது உண்
மைகள் மறைக்கப்படுகின்றன. அடாவடித்த
னம் மேலோங்கி பதவி ஆசைகள் பெருகு
கின்றன. வேற்று இலட்சியங்களும் எண்ணங்க
ளும் உருவாகின்றன. ஆசைகள் கூடிக்கூடி
பேராசை உருவாகிறது. பேராசை
எம்மை பாதாளத்தில் தள்ளுகிறது. மேலும்
மேலும் மனம் வருந்தியநிலையில், தவறுகள்
செய்யத்தூண்டுகின்றது.

எவராவது உலகத்தில் உண்மை — நாணய
ம் இல்லாமல், மனிதனுடைய பலவீனங்க
ளை அறிந்துகொண்டு அதைக் கடைப்பிடித்
து வெற்றி காண முடியும் என்று நினைப்ப
து முட்டாள்தனமானது; வாழ்க்கையின் அடி
ப்படைகளான உண்மை, நியாயம், சுதந்திர
ம், சமத்துவம், நல்லெண்ணம் என்பவை இல்
லாது கட்டப்படும் எந்தவொரு வாழ்க்
கையும் பழுதுபட்ட வாழ்க்கையே. இவற்
றை ஒரு ஒழுங்குமுறையில் கொண்டுவரும்
போதுதான் வாழ்க்கை நிலைபெறுகிறது.

விதை ஒரு கரு. அதை மண்ணில் ஊன்றி
நீர் வார்த்து முளைக்க வைப்பது நடைமு
றை. நடைமுறைதான் பலன் தரும். பலன்
பெற விடயங்களை நம் வாழ்வில் கடை
ப்பிடிக்க வேண்டும். நாம் அறிந்த உண்மை
களை வாழ்வில் கடைப்பிடிக்காதவரையில
த்துவங்கள் ஒருபோதுமே நம்முடையதாகா

து: ஆகவே தினமும் உண்மையைப் பேசுங்கள்.

எமது வாழ்க்கையில் உண்மைகளை நிலைநிறுத்த முயல வேண்டும். அதன்மூலம்தான் நியாயம் கிடைக்கும். எம்மிடம் நல்லெண்ணம் உருவாகும். உண்மைகள் மேலோங்கிச் செல்ல நல்ல எண்ணங்களைப்பற்றியே சிந்திக்க வேண்டும். நாம் முன்பு செய்த பிழைகளை, தவறுகளை திருத்தவேண்டும்.

செய்த தவறுகளை ஒப்புக்கொள்ளுங்கள். தவறுகளை ஒப்புக்கொள்வதே வளர்ந்த பண்பு. இதனால் நாம் வளரவும், முன்னேறவும் வாய்ப்புகள் பிறக்கின்றன.

தவறுகளை திருத்த முடியாத நிலை இருந்தாலும், தவறுகளை ஒப்புக்கொள்ளும் போது மனம் இலேசாகிறது. குற்ற உணர்வு குறைகின்றது. எதிரியும் மன்னித்து மறக்கும் நிலை உருவாகிறது.

சிலசமயம் சில மனிதர்களை உண்மையாக நம்பிவிடுகிறோம். இதன்போது தவறு செய்கிறோம். நம்பிக்குழிபறிப்பவர்கள் இவர்கள் எனக் கண்டபோது வருத்தப்படுகின்றோம். வாழ்வில் இத்தகைய ஏமாற்றங்கள் அடிக்கடி ஏற்படுகின்றன. அந்தச் சமயங்களில் 'இது உலக இயல்பு' என மன அமைதி அடைய வேண்டும்.

தவறு நேரும்போது அவற்றை திருத்த முயல வேண்டும். திருத்தக் கூடியவற்றை திருத்தும் துணிவு வேண்டும். திருத்த முடியாதவற்றை ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவம் நமக்கு வேண்டும். தவறுகளை ஏன் நாம் ஏற்றுக் கொள்ள மறுக்கிறோம்? அலசி ஆராயும்போது எமது சுயகௌரவம்தான் காரணமெனத்தெரிகிறது. எமது கௌரவம், அந்தஸ்து பாழாகிப்போய்விடுமே என்று நினைக்கிறோம். இதனாலேயே மனச்சாட்சியை அடக்கி வைத்து தவறுகளை மறைத்து, பொய்களை வளர்த்து உண்மைகளை மூடி மறைக்கிறோம்.

உண்மையிலேயே தவறுகளை ஏற்றுக் கொள்ளும்போது நமது கௌரவமும் நமது அந்தஸ்தும் ஒரு உயர்நிலையை அடைவதை உணர வேண்டும். கௌரவம் என்பது பிறர் கொடுத்து வாங்குவதில்லை. அது தானாகவே வருவது.

நாம் தெரிந்தோ, தெரியாமலோ தவறு செய்கிறோம். அப்போதெல்லாம் நம் தவற்றை ஏற்றுக் கொள்வது நல்ல அந்தச் சமயத்தில் மிக அவமானமாக இருந்தாலும் இது நம்மை உயர்த்தும் பண்பாக உதவுகின்றது.

தவறை மறுப்பவன் தன்னைத்தானே ஏமாற்றிக்கொள்கிறான். சூழ்நிலைகளைப் புரிந்து கொள்ள முடியாத முட்டாள்தனமான மனப்போக்கை வளர்க்கிறான். மேன்மேலும் வீணான கற்பனாவாதங்கள்மூலம் பொய்களையும் மேலும் குற்றங்களைப் புரிகின்றான். உண்மைக்கு ஏற்பட்ட அழிவு மரணத்தை அழைக்கும் சவாலாக மாறுகிறது. இப்படியான மனிதர்கள்மூலம்தான் மனச்சாட்சியானது உண்மைக்குப் பயந்து பொய்ப்பித்தலாட்டங்களுக்கு இடம் கொடுக்கிறது.

எனவே, ஒன்றைமட்டும் புரிந்து கொள்ள வேண்டும். தவறு ஏற்படாத வாழ்வு எதுவுமில்லை. தவறை உணர்ந்து திருந்துவதில் தான் முன்னேற்றமிருக்கிறது. தவறு மனித சமுதாயங்களில் ஏற்படும்போது அதை ஏற்றுக்கொண்டு மன்னிப்புக் கேட்பதில்தான் நல்லெண்ணம் நிலவுகிறது. வாழ்வில் என்றும் அமைதி கிட்டுகிறது.



புகையிரத நிலையத்தில்.....
"எங்கை பயணம் ?"

"அவுட்ட சிற்றிக்கு... அங்கை இருக்கிற பொடியனுக்கு டெலிபோன் கதைக்க வேணும். அங்கை போய் கதைச்சால் கொஞ்சக் காசோடை கதைக்கலாம். அதுதான்....."
"...? .... ? "

– இ. ஆறுமுக

தயாரிப்பு: திருமதி. கி.கிருஷ்ணபிள்ளை

குறுக்கெழுத்துப் போட்டி இல.7

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | 5 |
| 6 | 7 | | 9 | |
| 11 | 12 | 13 | | 15 |
| 16 | | | 19 | |
| 21 | | 23 | 24 | 25 |
| 26 | | 28 | 29 | 30 |
| 31 | 32 | 33 | 34 | 35 |
| 36 | 37 | 38 | | 40 |

மேலிருந்து கீழ்:

1–26 விளையாட்டுகளில் ஒன்று. இதை பண்டைய அரசர்கள் விளையாடியதாகவும் சரித்திரம் கூறுகிறது:

2–07 உறவு முறைகளில் ஒன்று.

3–13 இலவசமாகக் கொடுப்பதை இப்படியும் சொல்வர்.

5–35 நம்மினத்தவர்களின் வீடுகளில் நடைபெறும் வைபவங்கள் இம்முறைப்படி நடக்கும். குழம்பியுள்ளது.

9–24 இதை வீதிகளில் காணலாம். குழம்பியுள்ளது.

12–32 நம் பெண்கள் பலர் விரும்பி அணிவது.

13–28 விலை அல்லது விதி என்பர். குழம்பியுள்ளது:

33–38 தமிழ்நாட்டில் இதற்கு விலக்கு:

31–36 எண்ணெயிலிருந்து எடுக்கும் கழிவுப்பொருள் ஒன்று, வீதியில் காணலாம். தலைகீழாக.

32–37 தாய், தலைகீழாக இறுதி எழுத்து விடுபட்டுள்ளது.

இடமிருந்து வலமாக:

1–5 நம் நாட்டில் நாம் விரும்புவது.

6–7 பெண், வலமிருந்து இடமாக.

7–09 உயிரினம் மேலானது.

11–15 தொடக்கம், குழம்பியுள்ளது.

16–19 நம்மக்கள் உயிரைப் பாதுகாக்க இதிலும் இருந்தார்கள். குழம்பியுள்ளது.

21–24 கோயில்களில் ஆடும் ஆட்டம் ஒன்று.

23–25 இரும்பால் உருவானது. வீடு கட்ட அவசியம்.

26–28 பார்க்க முடியாதது; முகர்ந்தே அறியலாம். வலமிருந்து இடமாக.

30–29 பெண்களுக்கு மட்டுமே உண்டு.

31–34 இரகசியம், சஸ்பென்ஸ் என்று பொருள்; நம்பியுள்ளார்.
38–40 தென்னையில் இருந்து கிடைக்கும் பொருள்.

முடிவு திகதி: 28.11.1991

சரியாக விடை அனுப்பும் அதிஷ்டசாலி ஒருவருக்கு ஒரு நூல் அன்பளிப்பாக வழங்கப்படும்.

---

## குறுக்கெழுத்துப் போட்டி முடிவுகள்

**இல: 5**

இடமிருந்து வலம்:

1– 4 அபிராமி
8–10 முதுமை
11–13 பக்தி
18–20 தினம்
21–25 சக்கரம்
27–30 யாசகம்
31–34 மஞ்சள்
36–37 பசி
38–40 குகன்

மேலிருந்து கீழ்:

1–21 அனுபவம்
2–17 பிணக்கு
4–19 மிருனம்
5–30 சமுத்திரம்
26–36 வஞ்சி
27–37 பகல்
30–40 குணம்

**இல: 6**

1– 6 மக்கட்பேறு
7–11 கங்கணம்
13–14 குகை
19–24 ஆயிர்குலம்
26–28 மதன்
29–30 நூல்
31–36 கமண்டலம்
37–42 கரகாட்டம்
43–48 சிதம்பரம்

மேலிருந்து கீழ்:

1–43 மங்கையற்கரசி
2–26 ஆமணக்கு
3–21 கம்பர்
4–28 கட்புலன்
6–24 குறும்பு
11–23 கங்கு
27–45 தண்டம்
30–48 நூலகம்
32–44 மதம்
35–47 காரம்

சரியாக விடை .........அனுப்பியோர்..........

திரு. ரீ. யோகேந்திரன்,
5090 லிவகூசன் 1.

திரு. கோ. யோகராசா,
5090 லிவகூசன் 1.

செல்விகள். ஆனந்தி, சாந்தி,
ஜேர்மனி.

செல்வி. கி. பரிகௌரி,
3203 சார்ஸ்ரெந்.

திருமதி. வி. சிறீஸ்கந்தராஜா,
5090 லிவகூசன் 3.

திருமதி. அகல்யா குகன்,
4300 எசென் 11.

**பரிசுக்குரிய அதிர்ஷ்டசாலிகள்.....**

செல்வன். உமேஸ் கணேசன்,
[illegible] லங்கென்பெல்ட். ------

திருமதி. குகா ஆறுமுகம்,
4925 கலெராஸ்.

புள்ளி விபரப்படி நிகழ்வுகளை நிறுத்துப் பார்த்தால் அவரவர் தனிப்பெரும் மேதா விலாசங்களைக் காட்டும் கைங்கரியங்களில் எம்மவர்களது திறமைகள் எவையும் சளைத்தவைகளல்ல.

நாட்டுப் பிரச்சனையாகட்டும், நாலிகள் பிரச்சனையாகட்டு எங்கே எப்போது என்னென்ன அரங்கேறின என்பதை ஆதியிலிருந்து அந்தம்வரை விதண்டா விவாதங்களில் கரையும் பொழுதுகளோடு வாய்ப்பந்தல் (போட்டுவிடுவதில்) உண்மையிலேயே எம்மவர்களுக்குத் திறமை இருக்கிறது.

அதேவேளை நுணுக்குக்காட்டிகளாகி குறைகளைப் பூதாகரமாக்கி புத்திமதி கூறிவிட்டு புறமுதுகில் உமிழ்ந்து போகும் தனித்தன்மையும் இருக்கிறது.

ஆனால்... இத்தனை இருந்தும் ஒரு ஆக்கபூர்வமான செயற்பாட்டிற்கு வழியுண்டா ? அப்படி ஒன்று எதாவது ஒரு விடயத்தில் உருவாக வாய்ப்புண்டா

நிகழ்தகவுகளை எம்மட்டில் எடைபோட்டால் இது எப்படி சாத்தியமாகும் என்பதே கேள்விக்குறிதான்.

தன்மட்டில் ஒவ்வொருவரும் புத்திசாலியாகி தான் சொல்லுவது சரி என்பது சிறந்த விவாதமானால் கூட விட்டுக் கொடுப்புகளுக்கு இடமில்லாதபோது ஒன்றென்ன இரண்டென்ன எத்தனை வருடங்களானாலும் ஆக்கபூர்வமான செயற்பாடுகள் தோன்ற வழியுண்டா என்பதுதான் தற்போதைய கேள்வி. அப்படி ஆக்கத்திற்கான அறிகுறிகள் தோன்றினாலும் அதை அபகரித்துப் பெயர் வாங்கவென எத்தனை மனிதர் எம்முள் முள்ளாக.....

எனவே மனிதனும் 'தான்' என்பதை மறந்து 'தாம்' என்பதை நியாயமான விட்டுக்கொடுப்புகள்மூலம் உருவாக்க முன்வரும்போதுதான் ஆகக்குறைந்த ஆக்கபூர்வமான செயல்முறைகளாவது பிறக்க வாய்ப்புண்டு.

இதைவிடுத்து, ஒவ்வொருவரும் நியாயத்தைத் தேடி காலவரையற்ற விவாதிப்புகளாலோ, நேரத்தை விழுங்கும் அறிவுரைகளாலோ எதனையுமே சாதிக்க முடியாது. வேண்டுமானால் 'அறிவாளி' என்ற நாமத்தைப் பெற்று தனக்குத்தானே சந்தோசப்பட்டுக் கொள்ளலாம்.

கடல் வழி?!

இது ஒரு இலவச மாதாந்த வெளியீடு. தபாற் செலவாக 6x60 பெனிக் முத்திரைகளை அனுப்பி ஆறு மாத வெளியீடுகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

இச் சஞ்சிகையில் இடம்பெறும் ஆக்கங்களின் கருத்துக்கள் ஆக்கதாரர்களின் கருத்தாகும்.

புனைபெயரில் எழுதுபவர்கள் தங்கள் சொந்தப் பெயரைக் குறிப்பிடல் வேண்டும்

ஆக்கதாரர்,வாசகர்,யாவரும் கடல் பற்றிய

தொடர்புகளுக்கு


"KADAL",

POSTFACH 1425,

4018 LANGENFELD.



Die Erstellung dieses Heftes wurde durch das Diakonische Werk des Evang. Kirchenkreises Leverkusen ermöglicht.